# இஸ்லாத்தின் * * *

# * * * கோட்பாடுகள்

THE KUPPUSWAMI SASTRI
RESEARCH INSTITUTE,
MADRAS.

ஆக்கியோர் :

S. அப்துல் மஜீது

கும்பகோணம், டவுன் ஹைஸ்கூல்

தலைமைத் தமிழ்ப் பண்டிதர்

ஊள. சா. வேங்கடராம ஐயர் அவர்கள்

எழுதிய முகவுரையுடன் கூடியது.

பிரசுராலயம் :

பா பாடபுத்தக சாலை,

சியார்கோவில்.

1934

பதிப்

விலை அணா 5

All Rights Reserved

# முகவுரை

உலகம மிக விரைவாக நாகரிகததில முனனேறி வருகினறது அதறகு அறிகுறியாகப பல திறபபட்ட புததகஙகள வெளிவநது கொணடிருககினறன. மத சமபநதமான புததகஙகளும பல. எனது நண்பரான ஜனாப எஸ். அபதுல மஜீது எழுதிய "இஸ்லாத்தின் கோட்பாடுகள்" என்ற சிறு புததகம இவவகுபபைச் சேரநதது

உலகினர் சினனாடகளாக மத சமபநதமான கருததுக களை இளமையிலேயே சிறுவர் சிறுமியர்களுககுக கறபிகக வேணடியதன அவசியத தனமையை உணரநது வருகிறார்கள; சிறசில இடஙகளில அதறகேறபவே செயல முறையும நிகழநது வருகினறது. நிறக, மதசமபநதமான அறிவு முஸலிமகளுககு உயிரினும சிறநதது

இம முகவுரைககுரிய புததகம, தனது பெயருககு முறறும பொருததமான முறையில எழுததபபட்டுள்ளது. இது, சிறுவர் சிறுமியர் இனிது படிதது அறிநது கொளளு மாறு எளிய நடையில அமைநதிருககினறது. நடையின் இனிமையாலும விஷயச சிறப்பாலும இபபுததகம அறிஞர்களும போற்றக் கூடிய மாதிரியில் அமைநதிருப் பது ஆககியோரின மார்கக அறிவையும தமிழறிவையும புலபபடுததுகினறது.

இப் புததகம் பொதுவாகத் தமிழ் மக்களாலும் சிறப் பாக முஸ்லிமகளாலும் இனிது படித்தறிந்து கொள்ளப்

படவேணடிய சிறபபினையுடையது. இபபுததகம ஆரமபப பாடசாலைகளில படிககும முஸ்லிம சிறுவா சிறுமியா களுககு மதபபறறையும அறிவையும இலகுவில மனததே பதியசசெயயும பேராறறல படைததது எனபது எனது கருதது.

இப புததகம பொது ஜனஙகளாலும விததை இலாகா வைச சோநதவாகளாலும ஆதரிககபபடுவது நியாய மாகும

இப புததகம, இனிது பயன தநது இதன ஆககி யோருககு ஊககமூடடபபடின அவரால இஸ்லாம மத சமபநதமான பல சிறு பிரசுரஙகள அடுககடுககாய வெளி வநது தமிழ நாடடை அலஙகரிககும எனறு நமபலாம.

ஆணடில இளைஞரான ஆககியோா இநத நலல துறையில முயறசி செயவது எனபோனறவாகளுககுப பெரு மகிழசசியைத தருகினறது. அவரது நனமுயறசி பல துறைகளிலும பயன தருவதாக!

“நாராயண விலாசம,”
குமபகோணம.
19—12—’33


இஙஙனம.
ஊ. சா. வேங்கடராமன்,
தணடமிழத தொணடன.

# பொருள் அடக்கம்


| எண | விஷயம | பககம |
|---|---|---|
| | மககாவிலுளள கஃபா . | முகபபுப படம |
| 1. | பெயா .. | 7 |
| 2 | சமததுவம | 8 |
| 3 | சகோதாததுவம . . | 9 |
| 4 | சடட திடடஙகள | 10 |
| 5 | பகுததறிவு .. | 11 |
| 6. | ஸதிரீ சுதநதாம .. | 12 |
| 7. | பொதுவான போதனைகள .. | 13 |
| 8. | ஈமான அலலது நமபிககை . .. | 17 |
| 9. | அலலா(ஹ)வின குணஙகள | 18 |
| 10 | வானவாகள | 19 |
| 11 | வேதஙகள . | 20 |
| 12. | குாஆன . . . | 21 |
| 13. | தீாகக தரிசிகள .. . . | 25 |
| 14. | முஹமமது நபி (ஸல) .. | 26 |
| 15. | நியாயத தீாபபு நாள .. .. | 32 |
| 16. | நனமை தீமைகளின நீதிபதி ... | 33 |
| 17. | இஸலாததின அனுஷடானக கடமைகள . | 33 |
| 18. | நமபிககை (கலிமா) .... .. | 35 |
| 19. | தொழுகை .... . . | 36 |
| 20. | நோன்பு .... .... | 41 |
| 21. | ஜகாத .... ... | 44 |

| எண் | விஷயம் | | பககம |
|---|---|---|---|
| 22. | ஹஜஜு | ... | .... 48 |
| 23. | திரு நபி தினம | .... | .... 51 |
| 24. | லைலததுல கதா | ... | ... 53 |
| 25 | நோனபுப பெருநாள | | ... 54 |
| 26. | ஹஜஜுப பெருநாள | ... | ... 56 |
| 27. | முஹாரம | ... | ... 60 |
| 28. | கஃபா | ... | ... 62 |

## உலகத்தின் புராதன ஆலயம்



மககாவிலுளள கஃபா

[ 48, 62 பககஙகள பாாகக

# இஸ்லாத்தின் கோட்பாடுகள்

## 1. பெயர்

இஸ்லாம் என்னும் அரபுப் பதத்துக்குச் "சாந்தி" என்று பொருள். உலகத்திலுள்ள பெரிய மதங்களில் இஸ்லாம் மதமும் ஒன்று. இம்மதம் சாந்தியையும் அதை அடைவதற்குரிய வழிகளையும் போதிக்கிறது. அதனால் இதற்கு "இஸ்லாம்" என்னும் பெயர் இறைவனால் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த மதத்தைப் பின்பற்றுகிறவர்கள் "முஸ்லிம்கள்" என்று சொல்லப் படுவார்கள். இம்மதத்தை "முஹம்மதிய மதம்" என்றும் இதைப் பின்பற்றுகிறவர்களை "முஹம்மதியர்கள்" என்றும் சிலர் கூறுகிறார்கள். இவ்விதம் கூறுவது தவறு. இஸ்லாமிய வேதத்திலும் மதநூல்களிலும் இம்மதத்துக்கு "முஹம்மதிய மதம்" என்று கூறப்படவில்லை. "முஸ்லிம்" என்றால் கடவுளுடைய சட்டதிட்டங்களுக்கு முழுதும் கட்டுப்பட்டு நடப்பவன் என்று பொருள். கடவுளுடைய கட்டளைப்படியும் தன்னுடைய செயல்களுக்குத் தானே ஜவாப்தாரி என்னும் அச்சத்துடனும் நடந்துகொண்டு வருகிறவனே முஸ்லிம்.

# 2. சமத்துவம்

இம்மதத்தில் ஒரே கடவுள் ; ஒரே நபி ; ஒரே வேதம் ; ஒரே ஜாதி ; ஒரே தொழுந்திசை ; எல்லாம் ஒன்றேயாகும். இதில் ஜாதி வேற்றுமையில்லை ; நிறபேதமில்லை ; குலப் பாகுபாடில்லை ; மனிதர்களுக்குள் உயர்வு தாழ்வு இல்லை மனித சமத்துவம என்பது இஸ்லாத்தின் அடிப்படையாகும். இதில அரசனும் ஆண்டியும் ஒன்றே. எல்லாவிதமான நிறமுடையவர்களும் குணமுடையவாகளும் பணமுடையவர்களும் இல்லாதவர்களும் ஒரே பள்ளிவாசலில சரி சமானமாக நின்று ஒரே கடவுளை வணங்குகிறார்கள். ஆண்டான் அடிமை, முதலாளி தொழிலாளி, மேலோன் கீழோன், படித்தவன் படியாதவன், பணக்காரன் ஏழை, பலவான் பலஹீனன், உதகியோகஸ்தன் சேவகன் முதலிய வேற்றுமைகளை இஸ்லாம் அடியோடு ஒழிக்கிறது. இஸ்லாத்தில் ஓர் அடிமையும் அரசனுகலாம் இப்படியே சில அடிமைகளும் அரசாகளா யிருந்திருக்கிறார்கள். இந்தியாவிலேயே முஸ்லிம்களுள் "அடிமையரசர்" என்னும் ஒரு குடும்பத்தினர் சுமார் 100 வருடகாலம் அரசு செலுத்தி வந்திருக்கிறார்கள.

# 3. சகோதரத்துவம்

ஏக தெய்வக் கொள்கையும் ஏக சகோதரத்துவமும் இஸ்லாத்தின் அஸ்திவாரமாகும். இறைவனுடைய அடியாாகள் அனைவரும் சகோதரர்கள்; இவாகளெலலாம் ஒருதாய் வயிற்றில் பிறந்த சகோதரர்களைப் போன்றவாகள்; இவ்வுலக மக்கள் அனைவரும் ஒரே குடும்பத்தில் பிறந்தவர்கள்; இவர்கள எல்லாம் ஒரே சமமான நிலைமையில படைக்கப்பட்டிருக்கின்றனா என்பன இஸ்லாததின் போதனைகள. ஒரே தெய்வத்தை வணஙக வேண்டியதும் மானிடாகளுக்கு உதவி செய்யவேண்டியதுமே இவ்வுலகததில் ஒரு முஸ்லிம செய்யவேணடிய முக்கிய காரியங்களாகும். இஸ்லாம் சமாதானததையும் சாந்தியையும நிலைநிறுத்துகிறது. மனித சகோதரததுவமும் பொதுஜன ஊழியமுமே முஸ்லிம்களின் மதக்கடமைகளாகும் மானிடா அனைவரையும், அவர்கள் எந்தத தேசததவாகளா யிருந்தாலும், எந்த நிறமுடையவாகளா யிருந்தாலும், எந்தக்குலத்தவர்களாயிருந்தாலும், எநத வகுப்பினர்களாயிருந்தாலும் முஸலிம்கள் அவர்களை யெலலாம் சகோதராகள் என்றேபாவித்து அவர்களுடன் சகோதர பாவனையுடன் நடந்துகொள்ள வேண்டும்; இவ்வுலகத்திலுள்ள இதர மதங்களுடனும் மதஸ்தர்களுடனும் ஒற்றுமையோடும் சகோதர வாஞ்சை

யோடும் வாழ்ந்துவர வேண்டும். மனிதர்களிடம் அன்பு செலுத்தாதவர்களிடம் ஆண்டவனும் அன்பா யிருப்பதில்லை.

---

## 4. சட்ட திட்டங்கள்

இஸ்லாம் ஓர் இலகுவான மதமாகும். இதன் போதனைகளை எவரும் சுலபமாகப் பின்பற்றக் கூடும். இதன் சட்ட திட்டங்களைத் தினசரி வாழ்க் கையில் எல்லோரும் சாதாரணமாக அனுஷ் டிக்கலாம். இதன் சட்டங்கள் உலகத்திலுள்ள எல்லா மனிதர்களுக்கும் பொதுவாகவும் பரி பூரணமாகவும் அமைந்திருக்கின்றன. இவை களைத் திருத்தவோ மாற்றவோ அவசியமில்லை. இவை எல்லாக் காலங்களுக்கும் எல்லாத் தேசங் களுக்கும் ஏற்றவிதமாகவே யிருக்கின்றன.

அனுஷ்டிக்க முடியாத காரியங்களை இஸ் லாம் போதிக்கவில்லை. எல்லாம் யாவராலும் செய லில் செய்து காட்டக்கூடிய விதமாகவே யிருக் கின்றன. உலகத்தில் மனிதன் செய்யவேண்டிய காரியங்களை ஒழுங்காகச் செய்வதற்கும் ஆத்ம முன்னேற்றத்தால் மறுவுலகத்தில் மேன்மை அடைவதற்கும் அவசியமான இலகுவான விதி களை மட்டில் இஸ்லாம் போதிக்கிறது. அரசன் முதல் ஆண்டிவரையுள்ள எல்லா விதமான மனி

தார்களுக்கும் இவ்வுலக மறுவுலக வாழ்க்கைக்கு வேண்டிய பாடங்களைக் கற்றுக்கொடுப்பதே இஸ்லாமிய சட்டங்களின் நோக்கமாகும். பதின் மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்பு நிரூபணம் செய்யப்பட்ட சட்ட திட்டங்கள் இன்றுவரை ஆரம்பத்தி லிருந்ததேபோல் ஒரு சிறிதும் மாறு தல் அடையாமல் புதுப்புதிதாக இருந்து வரு கின்றன. இதிலிருந்தே இவற்றின் சிறப்பைத் தெரிந்துகொள்ளலாம்.

---

# 5. பகுத்தறிவு

இஸ்லாம் பகுத்தறிவின்மீது நிலைநிறுத் தப்பட்டிருக்கிறது இதில் அநுஷ்டான மில் லாத வெறும் நம்பிக்கையில்லை. இஸ்லாத்தின் போதனைகள் எல்லாம் புத்திக்கும் யுக்திக்கும் மிக வும் பொருத்தமானவை. இஸ்லாம் பகுத் தறிவை எல்லா விஷயங்களிலும் உபயோகப்படுத் தச் சொல்லுகிறது. அபிப்பிராய பேதங்களையும் ஆதரிக்கிறது. அபிப்பிராய பேதமானது ஆண்டவனின் அருள் என்று இம் மத போதகர் நபிகள் நாயகம் (ஸல்) கூறியிருக்கிறார்கள். ஆண் பெண் அனைவரும் அறிவைத் தேடவேண்டி யது இஸ்லாத்தில் கடமையாக்கப் பட்டிருக் கிறது. அறிவு இந்த உலகத்தின் எந்த மூலையி

லிருந்தபோதிலும் அதைத் தேடிச் செல்லும்படியும் நல்ல விஷயம் எதில் காணப்பட்டாலும் அதை ஏற்றுக்கொள்ளும்படியும் இஸ்லாம் கட்டளையிடுகிறது.

---

## 6. ஸ்திரீ சுதந்தரம்

இஸ்லாத்தில் புருஷர்களுக்குரிய சகலவிதமான அந்தஸ்தும் ஸ்திரீகளுக்கும் உண்டு. மனைவிகள் மீது புருஷர்களுக்கு எவ்வளவு பாத்தியமுண்டோ அவ்வளவு பாத்தியம் புருஷர்களின் மீதும் மனைவிகளுக்கு உண்டு. சொத்துரிமை, சுயேச்சை, விதவா விவாஹம், விவாஹ ரத்து, கல்வி ஆகிய உரிமைகளை இஸ்லாம் பெண்களுக்கு அளித்திருக்கிறது. ஆணும் பெண்ணும் ஒரே விதமான வஸ்துவினால் உற்பத்தியானவர்கள் என்றும் அவர்கள் ஒரே விதமான ஆத்மா உடையவர்கள் என்றும் சம அந்தஸ்து உடையவர்கள் என்றும் இஸ்லாம் கூறுகிறது. இஸ்லாம் பெண்களின் நிலைமையை உயர்த்தி யிருக்கிறது. "மாதாக்களின் பாதத்தில் மக்களின் சுவர்க்கம் இருக்கிறது," என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

# 7. பொதுவான போதனைகள்

இஸ்லாம் சோம்பேறித் தனத்தை விரும்புகிறதில்லை. யோக்கியமான எந்த உழைப்பையும் இஸ்லாம் கண்ணியப்படுத்துகிறது. ஒவ்வொரு காரியத்தையும அவரவர் தம்மாலானவரை முழு முயற்சியுடன் செய்ய வேண்டுமென்றும், ஆனால ஆண்டவனிடம் நம்பிக்கை வைக்கவேண்டுமென்றும் இஸ்லாம் கட்டளையிடுகிறது. ஒருவன் தான் முயற்சி செயதவரையில் தான் கூலி பெறுவான் என்பதும் தூண்டுதல் செய்கிறவனுக்கே ஆண்டவன் துணை செய்கிறுன் என்பதும் இஸலாத்தின் உபதேசங்களாகும்.

ஒருவன் செய்த நன்மை தீமையான காரியங்களுக்கு இவ்வுலகத்திலும் மறுவுலகததிலும் அவனே பொறுப்பாளி. அவனவனுடைய சுமையை அவனவனே சுமந்தாகவேண்டும். ஒருவனுடைய குற்றத்துக்கு இன்னொருவன் எக்காரணத்தை முன்னிட்டும் பொறுப்பாளியாக மாட்டான்.

மனிதன் இவ்வுலகத்தில் பிறக்கும்பொழுது பரிசுத்தமானவனுகவும் பாபமற்றவனுகவும் பிறக்கிறுன் என்றும், அவன் தன்னுடைய நலல செயல்களால் உயர்வும் கெட்ட செயல்களால் தாழ்வும் அடைகிறுன் என்றும் இஸலாம் கூறுகிறது.

இவ்வுலகத்தைவிட்டு மறுவுலகத்துக்காக மட்டும் பாடுபடவேண்டும் என்று இஸ்லாம் போதிக்கவில்லை. இதனால் தான் இஸ்லாத்தில் சன்னியாசம் என்பது கிடையாது. மறுவுலக வாழ்க்கை என்பது இவ்வுலக வாழ்க்கையின் தொடர்ச்சியே. ஆகையால், இரு உலகங்களிலும் இன்பம் அடைவதற்கான வழிகளையே இம்மதம் கூறுகிறது.

குலம், கோத்திரம், அந்தஸ்து இவைகளால் ஒருவன் இஸ்லாத்தில் பெருமை பாராட்டமுடியாது ஆனால், நன்னடத்தை, பரோபகாரம் என்பவைகளே உண்மையான பெருமைக்கு உரியன.

தாய் தந்தையர்களுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும். அவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடந்து நன்றி செலுத்தவேண்டும். சுகத்திலும் துக்கத்திலும் தாய் தந்தையர்களுக்கு நன்மையையே செய்யவேண்டும். பெற்றோரின் மனங்கோணாமல் நடந்து கொள்ளுவதே சிறந்த குணமாகும்.

பந்து மித்திரர்களுக்கும் நெருங்கிய சுற்றத்தார்களுக்கும் உதவி செய்து வரவேண்டும். அநாதச் சிறுவர் சிறுமிகளுக்கும் அகதிகளுக்கும் உதவி புரிய வேண்டும். ஏழைகளையும் ஆதரிப்பற்ற விதவைகளையும் ஆதரிக்க வேண்டும். வழிப்போக்கர் பிரயாணிகள் இவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்யவேண்டும். எல்லா

உயிரகளிடததிலும் அன்பாயிருக்க வேண்டும். வேலைககாரர்கள் குமாஸ்தாக்கள் முதலியவர்களை அன்புடனும் சமததுவத்துடனும் நடத்தவேண்டும். அவர்களுக்குக் கொடுக்கவேண்டிய கூலிகளைக் குறையாமல் கொடுக்கவேண்டும் "வேலைக்காரனுடைய வியர்வை நீர உலாந்துபோகுமுன் அவனுககுரிய கூலியைக் கொடுத்து விடுங்கள்," என்பது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கட்டளையாகும். தர்மம் செய்யவேண்டியதும் பிறாக்கென்று வாழ்ந்துவர வேண்டியதும் இஸலாததின் போதனைகள்.

வட்டி வாங்குவதையும், மதுபானம் செய்வதையும், பொய, புறம்பேசல், வியபிசாரம், களவு, கொலை முதலிய தீசசெயல்களைச் செய்வதையும் இஸலாம் பலமாகக் கணடித்து விலக்கியிருக்கிறது. மூடநம்பிக்கை, மதவெறி, மதச்சகிப்பின்மை, கடவுளுக்கு இணைவைத்தல ஆகியவற்றை இஸ்லாம் மிக அழுத்தமாகக் கண்டிக்கிறது. அச்சம், சோம்பல, கோழைத்தனம் இவற்றை இஸ்லாம் அடியுடன் வெறுக்கிறது.

இஸ்லாத்தில் தனி மனிதனின் யதேச்சாதிகார ஆட்சிக்கு இடமில்லை. எல்லா அந்தஸ்துக்களும் எல்லோருக்கும் சொந்தமானவை. பிற நாட்டினர் மீது துவேஷங்கொள்ளாது சொந்த நாட்டின் மீது அபிமானம் பாராட்டவேண்டும்.

ஏனெனில், இஸ்லாம் எல்லாத் தேசங்களுக்கும் பொதுவானதாகும்.

இஸ்லாம் ஏக தெய்வக் கொள்கையை வற்புறுத்துகிறது. உலகத்தில் தோன்றி மறைந்த தெய்வ ஞானம் பெற்ற தீர்க்க தரிசிகளுள் எவரையும் முஸ்லிம்கள் வணங்குவதில்லை; ஆனால் அவர்களை யெல்லாம் பரிசுத்த மானிடர்கள் என்று கருதி வருகிறார்கள். மனிதன் இறந்த பிறகு மறு ஜன்மம் இல்லை யென்பது இஸ்லாத்தின் கொள்கை. ஆனால், உலகத்திற்குக் கடைசீ நாள் ஒன்று உண்டு என்றும், அப்பொழுது மனிதர்கள் எல்லாம் ஆண்டவனால் நியாய விசாரணை செய்யப்படுவார்கள் என்றும், அவரவர்களுடைய நன்மை தீமைக்குத் தகுந்தபடி சன்மானமோ தண்டனையோ அடைவார்கள் என்றும் இம்மார்க்கத்தில் கூறப்பட்டிருக்கிறது.

இஸ்லாமதம் எந்தக் காலத்திலும் பலத்தாலும் பலாத்காரத்தாலும் பரப்பப்படவில்லை. பலாத்காரத்தைக் கொண்டு பரப்பப்படுவதை இம்மதம் தடை செய்திருக்கிறது. மதவிஷயத்தில் பலவந்தமில்லை என்பது இஸ்லாத்தின் கட்டளையாகும்.

# 8. ஈமான் அல்லது நம்பிக்கை

இஸ்லாத்தில் நம்பிக்கைக் கொள்கைகள் என்றும் அனுஷ்டானக் கடமைகள் என்றும் இரண்டுவகை உண்டு. நம்பிக்கை கொள்ளு வதற்கான கொள்கைகள ஆறு அனுஷ்டானக் கடமைகள ஐநது. அவற்றுள நம்பிகைகைக் கொளகைகள் ஆறும் பின்வருமாறு —

1. ஆண்டவன் ஒருவன உணடு ; அவனே சட்டங்களை இயற்றியவன்

2. வானவர்கள் உண்டு, அவாகள் ஆண்ட வனுடைய ஏவலாளாகள.

3. வேதஙகள் உண்டு , அவற்றில் ஆண்ட வனுடைய சட்டஙகள இருககின்றன.

4 தீாகக தரிசிகள் உண்டு , அவாகள் மூல மாகவே ஆண்டவனுடைய வேதங்கள் உலகத் துக்கு வந்தன.

5. நியாயத் தீாப்பு நாள் உண்டு; அப் பொழுது நன்மை தீமைகளுககுத் தக்க பலா பலன்கள் ஏற்படும்.

6. நன்மை தீமைகள் உணடு ; அவை ஆணடவனால பாகு பாடு செய்யப்படுகின்றன.

இந்த ஆறு அம்சங்களும் இஸ்லாத்தின் ஆணிவேர்போல் இருக்கின்றன. இவைகளை மனமார ஒப்புக்கொண்ட எந்தப் பகுத்தறிவுள்ள மனிதனும் தன்னுடைய மனம்போனபடியெல்

லாம நடககமாட்டான் அவ்வாறு நடநது கொள்ளுவதற்கும் அவனுடைய மனம இடங கொடாது.

---

# 9. அல்லா(ஹ்)வின் குணங்கள்

அவன கண்ணல் பாாகக முடியாதவன, இவ்வுலகததிலுள்ள எலலா உயிாகளைவிடச சக தியுடையவன். இவ்வுலகததைச சிருஷ்டி செய் தவனும் அவனே. இதை நடத்தி வைககிற வனும் அவனே. அவன் எந்த ஜாதியாருககும் எந்தத தேசததாருக்கும், எந்த ஒரு வர்ககததாருக கும, எந்த ஒரு காலததவருககும் மட்டும் உரி யவன் அல்ல. எலலாத தேசங்களுக்கும், எலலா ஜாதியாருககும், எல்லா மனிதர்களுக்கும், எல் லாக காலததவாகளுக்கும் உரியவன. அவன் ஒருவன், தனிததவன்; உலகததின் ரக்ஷகன்; ஒபபு உயாவு இலலாதவன், எவருடைய உதவி யும தேவை யிலலாதவன் அவன் ஆணுமலல, பெண்ணுமலல, ஆணும்பெண்ணு மலலாத அலியுமலல. அவன் இரக்கமுள்ளவன்; தீன தயாளு; இணையற்ற கொடையாளி; அளவற்ற அன்புடையவன். அவன் இவ்வுலகததில மனித உருவததிலோ வேறு எந்த உருவததிலோ அவ தாரம் செய்வதில்லை. வணக்கத்துக்கு உரியவன்

அவன் ஒருவனே. அவன் எல்லாம் அறிந்தவன்; எல்லாம் வல்லவன்; குற்றங்களை மன்னிக்கும் குண முடையவன்; பெருந்தன்மையுடையவன். பார பக்ஷமற்ற நீதிபதி, எல்லோருக்கும் தலைவன்; யாவருக்கும் வழிகாட்டி, அனைவருக்கும் உதவி செய்கிறவன் அவன் விரும்பியதைச் செய்வான், இவ்வுலகின் எந்த இடத்தில் என்ன நடந்தாலும் அதையெல்லாம் அறிந்து கொண்டிருக்கிறான் அவன் யாராலும் பெறப்படவுமில்லை அவ னும் யாரையும் அல்லது எதையும் பெறவில்லை. அவன் புகழ்நிறைந்தவன்; பரிசுத்தமானவன்; சிரஞ்சீவி, எல்லையற்றவன்; குற்றம் குறை இல்லா தவன்.

---

# 10. வானவர்கள்

## (மலக்குகள்)

இவர்கள் ஆண்டவனுடைய ஏவலாளர் கள்; சாதாரண மனிதர்களின் கண்ணுக்குப் புலப்பட மாட்டார்கள். ஆண்டவன் உலகில் அவதாரம் செய்வதில்லை; ஆகையால், அவன் எப்படித் தன்னுடைய சட்டதிட்டங்களை உலக ஜனங்களுக்கு அனுப்புவது? எனவே, உலகம் தோன்றிய காலமுதல் பலமனிதர்கள் பல தேசங் களில் கடவுளுடைய தூதர்களாக அவதாரம் செய்தார்கள். அத்தூதர்களுக்கு ஆண்டவன் தன்னுடைய ஏவலாளர்களான வானவர்கள்

மூலமாகச் சட்டதிட்டங்களை அனுப்பிவந்திருக்கிருன் நீரக்க தரிசிகளுக்கு வானவர்கள் புலப்படுவார்கள். இந்த வானவர்களிலும் ஆண் பெண் அலி என்ற பாலகள இலலே. இவாகள பாபமற்றவர்கள. இவர்கள ஒவ்வொருவருக கும் குறிப்பிட்ட வேலேகள உண்டு

---

# 11. வேதங்கள்

கடவுளுடைய சட்ட திட்டஙகள அடங்கிய வேதங்கள எலலாத தேசங்களுககும எலலா ஜாதியார்களுககும் அவ்வக்காலஙகளில அனுப்பப்பட்டிருககின்றன. ஆனல், கால வேற்றுமையாலும் உலக மாறுதலாலும் மனிதர்களின் செயல்களாலும் அவ்வேதங்களில பெரும்பாலும் மறைந்துவிட்டன. அவற்றுள் முககியமானவை கடைசீ நான்கு வேதங்களான தௌராத், ஜபூர், இன்ஜீல, குர்ஆன் என்பன ஆகும. இந்த நான்கில் முதல மூன்றும் நாளடைவில் மாறுதலடைந்துவிட்டன. ஆகவே, கடைசியில சொல்லப்பட்ட குர்ஆன் எல்லாத தேசங்களுக்கும் எல்லாக்காலததுக்கும் பொருததமான முறையில் அமைக்கப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி அடியில் விரிவாக வாசிப்போம்.

---

# 12. குர்ஆன்

கடவுளால் உலக மக்களுக்கு அனுப்பப்பட்ட வேதங்களில் குர்ஆன் ஷரீப் ஒன்று. இது முஹம்மது நபி (ஸல) அவர்களுக்கு வெளியிடப்பட்ட வேத புத்தகமாகும். இதுதான் கடைசி வேதமுமாகும்; இதுவே பரிபூரணமானதாகவும் இருக்கிறது குர்ஆனுக்கு முந்திய வேதங்கள் பல இருந்த இடமே தெரியாமல் மறைந்துவிட்டன. மற்றும் பல இடைக்காலங்களில் மனிதர்களால் திருத்தப்பட்டு விட்டன. இதனால் அவ்வேதங்கள் தம்முடைய சுய ஒளியை இழந்துவிட்டன. குர்ஆனிலும் பிறகால மனிதர்களால் திருத்தங்கள் ஏற்பட்டுவிடாதபடி நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பல முன் எச்சரிக்கையான காரியங்களைச் செய்திருக்கிறார்கள். அவர்களுடைய ஜீவிய காலத்தில் ஆயிரக் கணக்கான முஸ்லிம்கள் குர்ஆனை மனப் பாடமாகப் பாராயணம் செய்திருந்தார்கள். இப்பொழுதும் கலவிமான்களான பல முஸ்லிம்கள் குர்ஆன் முழுவதையும் பாராயணம் செய்திருக்கிறார்கள். இவர்களுக்கு ஹாபில்கள் என்று பெயர்.

குர்ஆன் அரேபியா தேசத்தில் வெளியாயிற்று; அதனால் அத் தேச பாஷையாகிய அரபியில் வெளிவந்தது. உலகத்தில் வழங்கிவரும் பாஷைகளில் இந்த அரபு பாஷைதான் கால

வேற்றுமையால் சிறிதும் மாறுபடாமல் இருந்துவருகிறது. குர்ஆனின் ஆயிரக் கணக்கான கையெழுத்துப் பிரதிகளும் கோடிக்கணக்கான அச்சுப்பிரதிகளும் இவ்வுலக முழுவதிலும் பரவி யிருககின்றன. பல ஆயிரக் கணககான மனிதர்களின ஹிருதயங்களிலும் இக் குர்ஆன் தங்கி இருககிறது ; கோடிககணககான மக்களால தினசரியும் படிககபபட்டு வருகின்றது. ஆனால இவைகளில ஒன்றுக்கொன்று ஒரு புளளிகூட விததியாசப் படுவதில்லை.

ஆணடவனுககும் அடியானுககும் உள்ள சம்பந்தம் என்னவென்று குர்ஆன் விவரமாயக் கூறுகிறது. இதில தததுவ உபதேசங்களும் சன்மாாக்கங்களும் நீதிகளும் நிறைந்திருக்கின்றன. ஞானம், கல்வி, வணக்கம், கடமை, கருமங்கள் ஆகிய விஷயங்களைப்பற்றி இதில விவரமாகக கூறப்பட்டிருக்கிறது. இதில பொன் போன்ற உயர்தர நலலுபதேசங்கள நிறைந்திருககின்றன. சாநதி, சமாதானம், அனபு, அபிமானம், கருணை முதலிய இனிய குணஙகளைக் குறிக்கக்கூடிய பல வாாததைகள குர்ஆன முழுதும் காணப்படுகின்றன. சமூக வாழக்கைக்குத் தேவையான சட்டதிட்டங்களும் ஆசார நடததைக்குத் தேவையான அனுஷ்டான முறைகளும் இதில் அதிகம் நிறைந்திருக்கின்றன. இவ்வுலக வாழ்க்கைக்கு வேண்டிய எல்லா விஷ

யங்களும் மறுவுலக வாழ்க்கைக்கு அவசியமான எல்லா விஷயங்களும் இதில் மலிந்து கிடக்கின்றன. இல்லற வாழ்க்கை, கொடுக்கல், வாங்கல், வியாபாரம் ஆகிய விஷயங்களும் இதில் காணப் படுகின்றன

முஹம்மது நபி (ஸல்) அவர்கள் மூலமாய் உலக ஜனங்களுக்கு அருளப்பட்ட இந்த உபதேச ரத்தினங்களே அரபியர்களிடம் ஓர் அதிசயமான உணர்ச்சியை உண்டுபண்ணிவிட்டன. தமது வாழ் நாட்களைச் சண்டை சச்சரவுகளில் வீணாக்கிக் கொண்டிருந்த அரபியர்களுக்குள் ஒற்றுமையையும் சாந்தியையும் சமாதானத்தையும் ஏற்படுத்தியது குர்ஆன்தான் உலகத்தில் சமாதானத்தின் அஸ்திவாரக்கல்லை நாட்டியது குர்ஆனே இதன் உபதேசங்கள் உலக ஜனங்களைத் துன்மார்க்கத்திலிருந்து திருப்பி நல்ல பாதையில் நடத்துகின்றன. இது பொதுவாக எல்லா மனிதர்களுக்கும் வழி காட்டியாயிருக்கிறது இஃது எல்லாத் தேசத்திலுள்ளவர்களுக்கும் எல்லாக் காலத்திலுள்ளவர்களுக்கும் எல்லா மார்க்கத்திலுள்ளவர்களுக்கும் ஒரு தீபமே போல இருந்து வருகிறது.

இதன் சட்டதிட்டங்கள் அனுஷ்டானத்துக்கு ஏற்றவை. இதில் ஆண்டவன் ஒருவன் உண்டென்பது மிகவும் நல்ல முறையில் நிலை நாட்டப்பட்டிருக்கிறது. இது சத்தியம் அறிவு

ஆகியவற்றின் அற்புதமாகும். இதுவே முஹம்மது நபி (ஸல்) அவர்கள் உலக ஜனங்களுக்குக் காட்டிச் சென்ற நிகரற்ற அற்புதமாகும்.

இந்த வேதத்திலுள்ள ஓர் அத்தியாயத்திற்குச் சமமான வேறொரு அத்தியாயத்தை மனிதர்களால் சிருஷ்டி செய்துவிட முடியாது. இதிலுள்ள சொல்லழகும் நடையழகும் இலக்கண இலக்கிய வளமும் அரபு பாஷையில் இணையற்று விளங்குகின்றன. இதன் சொற் சுவையும் பொருட் சுவையும் படிப்பவர்களைப் பரவசப்படுத்துகின்றன.

இஃது எந்த மார்க்கத் தலைவருடைய சரித்திரமுமல்ல; இதில் அருவருக்கத் தக்க இழிவான கதைகள் கிடையா. இதை முஹம்மது நபியவர்கள் கடவுளிடமிருந்து இருபத்துமூன்று வருட காலங்களில் சிறிது சிறிதாக அருளப் பெற்றார்கள். குர்ஆன் தனக்குமுன் தோன்றிய பல வேதங்களின் முக்கியக் கருத்துக்களை யெல்லாம் தன்னிடத்தில் கொண்டிருக்கிறது. இஃது எவ்வித திருத்தமும் ஏற்படாத முறையில் சம்பூரணமாக அமைந்திருக்கிறது.

குர்ஆனில் உள்ள ஒவ்வொரு வார்த்தையும் ஆரம்பத்தில் இருந்தது போலவே கொஞ்சமும் மாறுதல் இல்லாமல் இருந்து வருகிறது; சென்ற 1300 வருடங்களாக ஒரு புள்ளி கூட மாற்றப்படாமலிருக்கிறது; இனியும் எப்பொழுதும்

மாறுதல இலலாமல் அப்படியேதான் இருந்து வரும். இஃது உலக முழுதும் உள்ள மக்களில் ஒரு பெரும் பகுதியினரால் மகா கண்ணியத் துடன் காப்பாற்றப்பட்டுவருகிறது இது தான் கடைசீ வேதம். இதற்குபபிறகு வேறு வேதம் வெளிவராது இதுவே எலலாக காலததுக்கும் எல்லா ஜாதியாருககும் எலலாத தேசஙகளுக்கும் பொருத்தமாயிருககும் பொழுது வேறு வேதம அவசியம் இலலை இது வெளியாகி இதுவரை 1300 வருட காலம ஆகியும் வேறு வேதம வெளியாகவிலலை. எனவே இதுதான் கடைசீ வேதமா யிருந்து வருகிறது

---

## 13. தீர்க்க தரிசிகள்

(நபிமாாகள்)

பல தேசஙகளில பல ஜாதியாாகளுககுப் பல காலங்களில் ஆண்டவன் தனிததனியே தீாககதரிசிகளை அனுப்பியிருககிறுன. அவாகள் யாவரும் மனிதர்களே. அவாகளின் எண் ணிககை இவ்வளவு தான என்று எவரும் உறுதி யாகச் சொல்ல முடியாது. குர்ஆனில் 25 தீர்கக தரிசிகளின் பெயர்கள குறிப்பிடப்பட்டிருக்கின் றன. இவர்கள் எல்லோருக்கும் கடைசீயாகவும் பரிபூரணமாகவும் அனுப்பப்பட்டவர் அரே

பியா தேசத்தில் மக்காவில் தோன்றிய நபிகள் நாயகம் முஹம்மது முஸ்தபா ரஸூலே (இறைவனின் அருளும் ஆசீர்வாதமும் இவர்களுக்கு உண்டாவதாக!) அவர்களே இவர்களுக்குப் பிறகு வேறொரு தீர்க்க தரிசியும் இதுவரை இந்த உலகத்தில் எந்த நாட்டிலும் தோன்றவில்லை; இனியும் தோன்றப் போவதில்லை வேறொரு புதிய வேதம் தேவையில்லாதபோது வேறொரு புதிய தீர்க்கதரிசியும் அவதரிக்க வேண்டிய அவசியமில்லை. இறுதி நபி அவர்களின் விரிவான விருத்தாந்தம் இதன் கீழே கூறப்படுகிறது.

---

## 14. முஹம்மது நபி (ஸல்)

இவ்வுலகம் அறியாமையிலும் அந்தகாரத்திலும் அகப்பட்டு அவதிப்பட்ட காலத்தில் ஆண்டவன் முஹம்மது நபியவர்களைத் தன்னுடைய தூதராக அனுப்பிவைத்தான். எல்லா நாடுகளையும்விட அரப் நாட்டிலேயே அக்காலத்தில் அக்கிரமம் அதிகமாக நிறைந்திருந்தது. குடி, சூது, கொள்ளை, கொலை, விபசாரம் ஆகிய பஞ்சமா பாதகங்களும் அக்கால அராபியர்களிடம் குடிகொண்டிருந்தன. ஸ்திரீகள் மிருகங்களைவிடக் கேவலமாக நடத்தப்பட்டு வந்தார்கள். அவர்கள் தமக்குப் பிறக்கும் பெண் குழந்தைகளை உயிருடன் பூமியில் புதைத்து வந்தார்கள்.

அக்காலத்தில் கி. பி 571-ஆம் வருடம் ஏப்ரில மாதம் 20-ஆம் தேதி முஹம்மது நபியவாகள அரப்நாட்டின் தலைநகரமான மக்காவில் குறைஷிக் குலத்தில் ஜனனமானார்கள். அவருடைய தநதையான அபதுலலா அவா பிறபபதற்குச சிலமாதஙகளுககு முன்பே இறந்துவிடடார ஆகவே, பாட்டனா அப்துல முததலிப அக குழநதையைப் பராமரிதது வந்தார. அநத நாட்டு வழககபபடி அககுழந்தையும ஹலீமா என்னும் ஒரு தாதிபபெணணால பாலகொடுதது வளாககப்பட்டு வந்தது முஹம்மதின ஆருவது வயதில தாயாரான ஆமினாவும் எட்டாவது வயதில பாட்டனாரான அபதுல முததலிபும காலஞ்சென்றாகள எனவே, தாயதந்தையறற அநாதப் பிள்ளையைப் பெரியதந்தையான அபூ தாலிப் வளாதது வந்தார். இருபததைந்தாவது வயது வரையில் முஹம்மத இப் பெரிய தந்தையிடமே வளாந்து வந்தார். அதுவரையில பல நாடுகளுககுச் சென்று வர்த்தகம செயது நலல அனுபவம் பெற்றிருந்தார் சிறுவயதிலிருநதே இவர் உண்மை, ஒழுக்கம், முதலிய நற்குணங்களில் சிறந்து விளஙகினார்; இதனால அநத நாட்டிலுள்ளவாகளால "அல் அமீன்" (சரியான நம்பிகைக்குரியவர்) என்று அழைக்கப்பட்டு வந்தார். ஹதீஜா என்னும ஒரு பணககார விதவைப பெண்ணின் வர்ததகத் தலைவராயிருந்து நல்ல மதிப்பும் பெற்றார். அவருடைய வர்ததகத் திற

மையையும் புததிசாதுரியததையுமகண்டுபுகழந்த 40 வயதையுடைய அப்பெருமாட்டி அவரையே விவாஹம் செய்து கொண்டார். 25 வயது வரையில் மிகவும் பரிசுத்தத்துடனே இருந்துவந்த முஹம்மது 40 வயதுடைய அவ்விதவையை முதலமுதலாக மனமார மணந்துகொண்டு மிகவும் திருபதியுடனே இலலறம் நடததிவநதார அதுவரை அவா வேறொரு பெணணையும ஏறெடுத்துப் பாாததிலலை.

விவாஹததிறகுப் பிறகு அவா வியாபாரததில ஈடுபடவிலலை தம்முடைய மனைவியின் ஏராளமான சொததுக்களைத தான தருமங்களில செலவு செய்துவநதார. அடிககடி அவா தனிமையான இடங்களுக்குச சென்று கடவுள தியானம் செயது வருவதுண்டு. இவ்விதம் அனனம் ஆகாரம் இலலாமல அல்லும் பகலும் பல வருடகாலம் வரையில கடுமையான தவம்செயது வந்தாாகள. கடைசியில அவாகளுடைய 40-ஆவது வயதில மககாவுககுச சிறிது தூரததிலுளள ஹிரா என்னும் மலைககுகையில ரமலான் மாதம் 27-ஆவது இரவில தியானம் செய்து கொண்டிருக்கும்பொழுது ஜிப்ரீல் என்னும் வானவர் மூலமாக முஹம்மது அவர்களுக்கு ஆண்டவனுடைய வஹீ என்னும அருள் உண்டாயிற்று. அன்றுமுதல் அவாகள் உலகத்து ஜனங்களுக்கு ஆண்டவனுடைய செய்தியை அறிவிக்கும் தூத

ராகிவிட்டார்கள் அன்றுமுதல் அவர்கள் கட வுள் தமக்கு அறிவிக்கும் போதனைகளை யெல லாம் ஜனங்களுக்குப் போதிக்க ஆரம்பித்தார் கள். அதுமுதல 23-வருட காலமவரை முஹம் மது நபி (ஸல) அவர்களுக்குக கடவுளுடைய ஞான வெளிபபாடுகள் வநதுகொணடே யிருந் தன. குர்ஆன் என்பது இந்த 23 வருடத்தின தேவஞான வெளிபபாடுகள கொணடதுதான் இக குர்ஆனின் போதனைகளே இஸ்லாத்தின முககியமான சட்டதிட்டஙகள்.

முதல மூன்று வருஷகாலம வரையில முஹம மது நபி (ஸல) அவாகள் இஸலாத்தின் கொள கைகளை இரகசியமாயப் போதித்து வந்தாாகள. அப்பொழுது சுமாா 40 போகளே இஸ்லாத்தில சோந்தாாகள. பிறகு பஹிரங்கமாகப் போதித்தாாகள் சிலர் அப் போதனைகளை ஏற்றுக்கொண்டு இஸ்லாத்தைப பின்பற்றினா கள. பலர் முஹம்மது நபியவர்களையும் அவர் களுடைய போதனைகளையும் எதிாக்க ஆரம் பிததார்கள் இதனல் நாயகம் அவர்களுககும் அவர்களைப் பின்பற்றி யவர்களுக்கும் பலவித இடையூறுகள் நேரிட்டன. பலர் சித்திரவதை செய்யபபட்டார்கள் ; சிலர் கொலலப்பட்டார்கள். ஆனல, அக்கொடுமைகளுக்குப் பயந்து ஒருவரா வது இஸ்லாத்தை விட்டுவிடவில்லை. ஒருநாள் முஹம்மது நபி (ஸல்) அவர்களை இரவில கொலை

செய்து விடுவதென்று மக்காவாசிகள் ஏற்பாடு செய்துவிட்டார்கள் அன்றிரவே நபிகள் நாயகம் (ஸல) அவாகள அபூபகா (ரலி) என்னும் தம்முடைய முககிய சிஷ்யருடன் மககாவை விட்டு வெளியேறி ஒருவருககும் தெரியாமல மதீனாவுக்கு சென்றுவிட்டாாகள். மதீனா என்னும் நகரம் மககாவிலிருநது வடக்கே 233 மைல தூரததில் இருககிறது இது நடநதது நாயகம் அவாகளுககு நபிப்பட்டம் வந்த 13-ஆவது வருடமாகிய கி பி 622-ல ஆகும். இதுதான் ஹிஜ்ரத என்று சொலலப்படும் இவ் வருஷததி லிருந்துதான் முஸலிம்களின் ஹிஜ்ரி வருடம ஆரம்பமாயிற்று.

மதீனாவாசிகள வெகு சீககிரததில முஹம்மது நபி (ஸல) அவாகளின போதனைகளை ஏற்றுக் கொணடு இஸ்லாததைத தழுவிக்கொண்டாாகள். இஸ்லாததை ஒழிதது விடுவதற்காக மககாவாசிகள பலமுறை மதீனாவுககுப் படையெடுததுச் சென்று பெரும் பெரும் யுததங்கள் செயதார்கள். முடிவில முஸ்லிமகளே ஜயமடைந்தனா. மக்காவாசிகளும் இஸ்லாத்தைச் சுயமே தழுவிக் கொண்டாாகள. பிறகு அரப் தேசம் முழுதுமே இஸ்லாத்தைத் தழுவி விட்டது. முடிவில் ஹிஜ்ரி 11-ல ரபீஉல் அவ்வல் மாதம் முதல் தேதியன்று கி பி 632-ல் தம்முடைய 63-ஆவது வயதில் முஹம்மது நபி (ஸல) அவர்கள் மதீனாவில காலஞ் சென்ருர்கள். நபிகள் பிரான்

மதீனாவில தங்கி யிருந்த சுமார 10 வருட காலத துக்குள அவாகள் அரப் தேசமுழுதும ஆசாரம ஒழுக்கம் ஆகிய பல விஷயங்களில முன்னேற்ற மடையுமபடி சீர்திருததங்களைச செய்து விட்டாா கள இதறகிடையில அவாகள பல யுததங்களில ஈடுபடும்படியான அவசியம நோநது விட்டது. அந்த யுததங்களில ஒரு யுததமாவது இஸ்லாத தைப பலாதகாரமாகப பரபபுவதறகாகச செயயப படவிலலை. எலலாம தறகாபபுககாக நடந்த யுததஙகளே. எவரும் பலவந்தமாக இஸ்லாத தில சோககப்பட்டதிலலை.

முஹமமது நபி (ஸல) அவாகள இஸ்லாத தின் திருநபி என்று சாதாரணமாக அழைககபபடு கிறாாகள. இவாகளே இஸ்லாததின கடைசீ நபி. முஹமமது நபி (ஸல) அவாகளுககுப பிறகு வேறு நபி இலலையென்றும அவாகளுக்குமுன உலகத் தில தோன்றிய எலலாத தீாகக தாிசிகளையும் மனிதாகளுககு நோவழி காடடுவதற்காகக கடவு ளால அனுபபபபட்ட பாிசுதத மானிடாகள் என்றும முஸலிமகள ஒபபுக்கொளளுகிறாாகள.

மனித வாககத்தில குணததாலும் நடத்தை யாலும் மேனமையுண்டாகுமே யலலாது. பிறப் பாலும் நிறத்தாலும் தேசததாலும் பாஷையா லும் ஒன்றும் மேன்மையிலலை என்று முஹம்மது நபியவாகள் (ஸல) உபதேசிததார்கள். ிவாகள்

தெய்வ அம்சம் பொருந்தியவர்கள் என்று முஸ்லிம்கள் கருதுவதில்லை; ஆனால், தெய்வ ஞானோதயம் பெற்றவர்கள் என்று ஏற்றுக் கொள்ளுகிறார்கள் திருக்குர்ஆன் கடைசீ வேதமாகவும் பரிபூரணமாகவும் அமைந்திருக்கிறது அதைப்போலவே, அவ்வேதத்தைக் கொண்டு வந்த முஹம்மது நபி (ஸல்) அவர்களும் கடைசீ நபியாகவும் மனிதர்களுக்கு சம்பூரண முன்மாதிரியாகவும் அமைந்திருக்கிறார்கள்.

---

# 15. நியாயத் தீர்ப்பு நாள்

ஒரு காலத்தில் இவ்வுலகத்திலுள்ள உயிர்களெல்லாம் மரணமடைந்துவிடும். இஃது எப்பொழுது ஏற்படும் என்று எந்த மனிதராலும் சொல்லமுடியாது. இத்தினத்தில்தான் அவரவருடைய நன்மை தீமைக்கேற்ற தீர்ப்பு நாயனால் செய்யப்படும் இந்த உலகத்தில் ஒருவர் செய்யும் ஒவ்வொரு காரியத்துக்கும் அவரே மறுவுலகத்தில் ஜவாப்தாரியாவார். ஆகையால் இஸ்லாத்தில் மறுவுலக வாழ்க்கை யென்பது இவ்வுலக வாழ்க்கையின் தொடர்ச்சியே யாகும். ஒருவர் இவ்வுலகத்தில் செய்த காரியங்களே அவ்வுலகத்திலும் தொடர்ந்து வரும்.

---

## 16. நன்மை தீமைகளின் நீதிபதி

••••••○○•••••

நன்மை செய்து நலவாழ்க்கை நடத்தியவர்களுக்குச் சன்மானமும் தீமைசெய்து துர்நடத்தை நடத்தியவர்களுக்குத் தண்டனையும் கொடுக்கக் கூடியவன் ஆண்டவனே ஒருவன் செய்யும் காரியத்தை நல்ல காரியம் என்றோ கெட்ட காரியம் என்றோ தீர்ப்புச் செய்வது ஆண்டவனைச் சேர்ந்ததாகும் ஆண்டவனுக்கு நன்மையாகத் தோன்றக் கூடிய சில காரியங்கள் மனிதர்களுக்குத் தீமையாகக் காணப்படலாம். ஆண்டவனுக்குத் தீமையாகத் தோன்றக் கூடிய சில காரியங்கள் மனிதர்களுக்கு நன்மையாகக் காணப்படலாம். ஆகையால்தான் இன்ன காரியங்கள் நன்மையானவை என்றும், இன்ன காரியங்கள் தீமையானவை என்றும் முடிவு செய்கிறவன் ஆண்டவனே என்று ஒப்புக்கொள்ளவேண்டும்.

---

## 17. இஸ்லாத்தின் அனுஷ்டானக் கடமைகள்

••••••○○•••••

இஸ்லாத்தின் முக்கிய அனுஷ்டானக் கடமைகள் ஐந்து. இவ்வைந்தும் இஸ்லாத்தின் ஐந்து பெருந் தூண்கள் என்று கருதப் படுகின்றன:

1. “ஆண்டவனைத் தவிர வணக்கத்திற்கு உரியவன் வேறு யாரும் இல்லை. உண்மையாகவே முஹம்மது நபி (ஸல்) அவர்கள் ஆண்டவனுடைய அடியாரும் திருத்தூதரும் ஆவார்கள்.” இதனை மனத்தில் உறுதியாகக்கொள்ளுவதுடன் வாயாலும் சொல்லவேண்டும்.

2. தினம் ஐந்து வேளைகளில் அந்த ஏக ஆண்டவனைத் தொழவேண்டும்.

3. வருஷந்தோறும் ரமலான் மாத முழுவதும் நோன்பு கொள்ளவேண்டும்

4 பணமுடையவர்கள் வருஷத்திற்கு ஒரு தடவை ஜகாத் என்னும் ஏழை விகிதம் கொடுக்க வேண்டும்.

5. போதிய பணமும் பலமும் உள்ளவர்கள் ஆயுளில் ஒரு தடவையேனும் அரேபியா தேசத்தில் உள்ள மக்காவிற்குச் சென்று ஹஜ்ஜு செய்ய வேண்டும்.

இவ்வைந்து விஷயங்களிலும் பல சிறந்த கருத்துக்கள் அடங்கி யிருக்கின்றன. அவற்றை ஒவ்வொன்றாக அடியில் விளக்குவோம்.

---

# 18. நம்பிக்கை (கலிமா)

இஸ்லாத்தின் ஐந்து முக்கியக் கடமைகளுள் முதலாவது, ஒரே தெய்வத்தின்மீது உறுதி கொள்ளுவதும் முஹம்மது நபி (ஸல) அவர்கள் அவ் வாண்டவனுடைய தூதர் என்பதில் உறுதி கொள்ளுவதுமாகும் "அல்லா(ஹ்)வைத் தவிர சத்தியமாகவே வணக்கத்துக்கு உரியவன் வேறுயாருமே இல்லை. அவன் தனித்தவன்; அவனுக்குச் சமானமானவர் யாரும் இல்லை உண்மையாகவே முஹம்மது நபி(ஸல்) அவர்கள் ஆண்டவனுடைய அடியாருமே திருத்தூதருமே ஆவார்கள" என்று மனஉறுதி கொள்ளுவதுடன் வாயால் சொல்ல வேண்டும்.

மனிதர்கள் அல்லா(ஹ்)வுக்கு முழுதும் கட்டுப்பட்டு அவனை வணங்குவதற்கும் திரு நபி (ஸல்) அவர்களை வழிகாட்டியாகப் பின்பற்றுவதற்கும் இஃது ஆண்டவனுடன் செய்துகொள்ளும் ஓர் உடன்படிக்கையாகும் ஏக தெய்வத்துக்கு இணை ஒன்றும் இல்லை. அவ்வொரே தெய்வத்தை வணங்கவேண்டும் ஏக தெய்வத்தின் இணையாகவோ, துணையாகவோ, உறவாகவோ, பிரதிநிதியாகவோ, அவதாரமாகவோ எவரும் இல்லை. உலகத்தின் சகல விதமான சிருஷ்டிகளை விட மனிதன் உயர்ந்த அந்தஸ்தில் படைக்கப்பட்

மனிதன் சிருஷ்டிக்கப் பட்டது

அவனுக்குக் கீழ்ப்பட்ட சிருஷ்டிப் பொருள் களின்மீது ஆதிக்கம் செலுத்துவதற்காகவே இயற்கையின் சகதியின்மீதும மனிதன் ஆதிக் கம் செலுத்தி அதை அடக்கியாள வேண்டிய வஞு யிருககிருன். மற்ற சிருஷ்டிகளுககு இல்லாத பகுததறிவும் மனிதனுக்கே கொடுககப் பட்டிருககிறது அபபடிப்பட்ட மனிதன் அவ னுக்குக் கீழ்ப்பட்ட சிருஷ்டிகளுககு வணககம செய்வது தகாது. மூஹம்மது நபி (ஸல) அவர் கள ஆண்டவனுடைய ரீாக்கதரிசி என்று நம் பிக்கை கொள்ளுவதனுல அப்பெருமாஞர் அவர் களின் அடிச்சுவடடைப பின்பற்றி நடந்து கொள்ள வேண்டியவஞகிருன் மனித சமூகத தின் உயர்வுககாகவும் உலக மககளின் சகோதரத துவததுக்காகவும் சமத்துவததுக்காகவும் நாய கம் அவாகள் செயது காட்டிசசென்ற இணையற்ற காரியங்களுககாக ஒவ்வொரு மனிதனும அவர் களுக்கு நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கி ருன்

## 19. தொழுகை

தொழுகை இரணடாவதும் அதிக முக்கிய மானது மாகும். ஒவ்வொரு நாளும் ஐந்து வேளைகளில ஏக தெய்வ வணக்கம் செய்யவேண் டும். இவ்வணக்கததைத் திரிகரண சுத்தியோடும்

முழுப் பக்தியோடும் பூரண விசுவாசத்தோடும் செய்யவேண்டும் அப்பொழுது எந்த விதமான உருவத்தையும சிலையையும் இறைவனுக்கு இணை யாக வைததுக கொள்ளக்கூடாது

தொழுகையானது வாலிபர் வயோதிகா, அரசன ஆண்டி, வலியாா எளியாா, ஆண் பெண் ஆகிய எலலோரும நிறைவேறற வேண்டிய தாகும நமது சரீரததைக காப்பாறறுவதற்கு ஆகாரம உடகொளளுகிறோம, ஆகாரம இலலா விடடால உயிா வாழ முடியாது அதுபோலவே, ஆன்ம வளாசசிககாகவும் ஆதம பரிசுததததிற் காகவும தொழுகையானது இன்றியமையாத ஆகாரமாகும. அனறியும, தொழுகை சன்மாாக் கததுக்கு வழிகாடடுகிறது, மனிதன் துன்மாாக் கங்களில பிரவேசிககாமல தடுககிறது. பரலோக வாழககையில வெறறி பெறுவதற்கும இகலோக வாழககையில வெறறியடைவதற்கும் தொழுகை பெருநதுணை புரிகிறது.

நமமைச சிருஷ்டித்துக் காபபாற்றிவரும் ஆண்டவனை நாம தினமும் ஐந்து வேளை இவ் விதம் வணங்கி வருகிறோம். அவனுடைய திரு நாமங்களையும் புகழையும் அததொழுகையில பல முறை ஜபிக்கிறோம். தொழும்போது நம்முடைய ஹிருதயததை அவ் வாண்டவனிடமே செலுதத விடுகிறோம். இதனால நாம் கடவுளின் உண் மைத் தொண்டர்களாகவும் பரிசுத்த பக்தர்களாக

வும் ஆகிவிடுகிறோம். தொழும்போது புலன் களைப் பல விடங்களிலும் சிதறவிடாது இருக்க வேண்டியது அவசியமாகும். இதனால் புலன்களை அடக்கும் சக்தியும் ஏற்படுகிறது.

ஐந்து வேளைத் தொழுகையும் மிகவும் குறுகிய காலத்திற்குள் முடிக்கப்படுகிறது. ஒவ் வொரு வேளைத் தொழுகையும் ஐந்து முதல் பத்து நிமிஷ நேரத்துக்குள் முடிந்துவிடும். முதல் வணக்கம் சூரியோதயத்துக்கு முன் அதி காலையில் செய்யப்படுகிறது. ஆண்டவனை ஞாப கப் படுத்திக்கொள்ளவும் அவனுடைய பெயரால் பகல் நேரத்தின் வேலைகளை ஆரம்பிப்பதற்கும் இது சரியான நேரமாகும்.

இரண்டாவது வேளை மத்தியான்னத்தில் சூரியன் உச்சியிலிருந்து சாய்ந்தபிறகு ஆரம்ப மாகிறது. உலக விஷயங்களில் ஈடு பட்டவர்கள் மறுபடியும் இறைவனைப்பற்றி ஞாபகப்படுத்தப் படுகிறார்கள். மூன்றாவது வணக்கம் பிற்பகல் மாலையில் செய்யப்படுகிறது. நான்காவது வணக் கம் பகல் முடிந்து இரவு வந்தவுடன் ஆரம்பமா கிறது இவை பகல் பொழுதை நல்ல விதமாக முடித்ததற்காக ஆண்டவனுக்கு நன்றி செலுத் துவதற்கு அறிகுறியாம். கடைசி வணக்கம் படுக்கைக்குப் போகுமுன் செய்யப்படுகிறது. இவ் விதம் தினசரிப் பொழுதானது கடவுள் வணக் கத்திலும் பக்தியிலும் அவனுடைய ஞாபகத்தி லும் கழிக்கப்படுகிறது.

தொழுகையில ஆண்டவன் முன் எல்லோரும் சமம் என்று காட்டப்படுகிறது தொழுகைககுக குறிப்பிட்ட நேரம் வந்தவுடன் "தொழுகைக்கு வாருங்கள" என்று பள்ளி வாசலி லிருந்து அழைக்கப்படுகிறது. இதற்கு "பாஙகு" என்று சொல்வது வழக்கம். இந்த பாங்கு சப்ததததைக் கேட்டவுடன் முதலாளி தொழிலாளி, ஆண்டான் அடிமை, தனவந்தன் ஏழை, பெரியவர் சிறியவா, வயோதிகா வாலிபா ஆகிய அனைவரும் ததம் வேலைகளை விட்டுவிட்டுப பள்ளிவாசலுககு விரைந்து செலலுகிருா கள இதனுல் ஒருவருக் கொருவா கலந்துறவாடுதலும் ஒற்றுமையும் அன்புமட நட்பும் அபி விருததி யடைகினறன

பள்ளிவாசலுக்குச சென்றவுடன் கை, கால், முகம் முதலிய உறுப்புககளைச் சுததம் செய்து கொணடு, உயாவு தாழ்வு முதலிய விததியாசங் கருதாமல், வரிசைக் கிரமமாக ஒருவா தோளோடு மற்றவா தோள் படும்படியாகச சோந்து அணி யணியாக நிற்கின்றனர். இவ்வணககத்தில் ஈடுபட்ட எல்லோரும் இடையிடையே "அல்லாஹு அக்பா" (ஆண்டவனே பெரியவன்) என்று அடிக்கடி ஏகோபிதது முழக்க மிடுகிருாகள. இதனுல, மனிதாகளுககுள் உயர்வு தாழ்வு இலலை; ஆண்டவனே பெரியவன் என்பது எடுத்துக் காட்டப்படுகிறது. ஓர் அரசனும் அவனுடைய

பிரஜையும் ஒரே இடத்தில் ஒரே சமயத்தில் தோ ளோடுதோளுற நின்றுகொண்டு "ஆண்டவனே பெரியவன்" என்று உரகககக கூறுகிருர்கள். இத ுல பிறப்பாலும, செலவததாலும், அந்தஸ்தா லும், அதிகாரததாலும் உயர்வு தாழ்வு இலலை யெனபது செய்கையாலும் வாாததையாலும் நிரூபிததுக காடடபபடுகிறது.

ஓா அரசனும ஒரு பரம ஏழையும் ஒரே சமயததில தோளோடு தோள சோந்து தொழு கையில நிறகவேணடியிருககிறது. சிர வணககம் செயயும்போது முன வரிசையில ஒரு தோட்டி யிருநதால, பின வரிசையில ஒரு சீமானிருநதால் தோட்டியின் பாதஙகளில அச் சீமானுடைய சிரசு பொருந்துகிறது. இதுதான் இஸலாததின் தொழுகையிலுள்ள இணையறற சமததுவமாகும. இநதக காட்சியை இறைவனுடைய பள்ளிவாச லில அலலாமல வேறு எஙகும் கணடுகொளள முடியாது.

தொழுது கொள்ளுகிறவாகள் எப்பொழு தும சுததமாயிருககிருாகள. தொழுகைக்கு முன் "வலு" என்னும அர்தத ஸநானம செய்ய வேணடியது அவசியமாகும். இதில கை, கால, முகம், பல, நாசி, காது, நா ஆகிய உறுப்புககள் நன்ருக சுததம செய்யப்படுகின்றன. இதனல் சுகாதாரம விருததி யடைகிறது; தேகப் பரிசுத்த மும் மனப் பரிசுததமும் ஏற்படுகின்றன. தேகத் தில் வியாதிகள் அணுக இடமேற்படுவதில்லை.

தொழுகிறவர்கள் தினசரியும் காலையில் 5 மணிக்குப் படுக்கையைவிட்டு எழுந்திருக்க வேண்டியவர்களாயிருக்கிறார்கள். இதனால் அவர்கள் சுறுசுறுப்பும் உற்சாகமும் அடைகின்றனர். ஐந்து நேரமும் குறிப்பிட்ட காலங்களில் தவறாது தொழுது கொள்ள வேண்டியிருப்பதால் இவ்வுலகத்தின் காரியங்களையும் காலந்தப்பாது குறிப்பிட்ட நேரங்களில் செய்து முடிக்க வேண்டுமெனும் நல்ல பழக்கமும் ஏற்படுகிறது. தொழுகையில் குனிதல், நிமிர்தல், தலை வணக்கம் செய்தல் முதலிய செயல்களால் தேகத்தின் ஒவ்வொரு பாகமும் நரம்புகளும் தசைநார்களும் ஆடி அசைந்து இரத்த ஓட்டத்தைச் சரிப்படுத்துகின்றன. இதனால் பூரண தேக ஆரோக்கியம் ஏற்படுகிறது. இவ்விதம் தொழுகையானது பல இக பர சாதனங்களைக் கொடுக்கிறது.

---

# 20. நோன்பு

ஒவ்வொரு வருஷமும் ரமலான் மாதம் முழுதும் உபவாசம் என்னும் நோன்பு வைக்க வேண்டியது இஸ்லாத்தின் அநுஷ்டானக் கடமைகளில் மூன்றாவதாகும். சரீர சுகத்துடன் இருக்கும் பருவமடைந்த ஒவ்வோர் ஆண் பெண் மீதும் இது கடமையாகும். தினசரி அதிகாலை

யில கிழக்கு வெளுத்தது முதல் மாலே சூரியாஸ்த மன காலம வரையில் ஒன்றும் உண்ணுமலும் குடிககாமலும் மனேவியரை நெருங்காமலும் இருக்கவேண்டும்.

கோபமடைந்த தெய்வத்துக்குச் சாந்தி அளிப்பதற்காக இந்த நோன்பு ஏற்படவில்லே; அலலது இறநதுபோன முன்னோாகளின் பாப விமோசனததிற்காகவும் முஸ்லிமகள நோன்பு நோற்பதிலலே. அவரவாகளின் சொந்த நனமைக் காகவும் மனித சமூகததினா நலததிறகாகவும் தீமையினின்றும் தஙகளேக காததுக் கொளளுவ தறகாகவுமே இந்த நோன்பு ஏற்பட்டிருககிறது. பிரயாணிகளும் வியாதியஸ்தர்களும் அவர் களுககுச் சௌகரியமான சமயததில் இந்த உப வாசத்தை வைததுக்கொள்ளலாம.

பகலமுழுதும் ஆகாரம் ஜலம் உட்கொள்ளா மல இருப்பது மட்டும் இநத உபவாசத்தின் நோககமலல. ஐந்து புலன்களேயும தீயவழிகளில செலுததாமல் மனப் பரிசுததத்தைப் பெறவேண் டும். காமம, வெகுளி, பொருமை, பேராசை, மோசம, வஞ்சகம், புறங்கூறல, கடுமொழிகூறல் ஆகிய கெட்டகுணங்களே நீக்கவேண்டும். இவை யே இந்த நோன்பின் முககிய இலக்ஷணங்களாம். வாழக்கையில ஏற்படும கஷ்ட நஷ்டங்களே மன முவந்து ஏற்றுககொள்ளும் பக்குவத்தை உண்டு பண்ணுவதும் இதன் நோக்கமாகும். தூய்மை,

அன்பு, தாராளம், தயை, தைரியம், விடா முயற்சி, ஊக்கம், சாந்தம், சகிப்புத்தன்மை, சகோதரத்துவம் ஆகிய உயர்ந்த குணங்களைப் பயிற்சிசெய்து கொள்ளுவதற்கு இந்த நோன்பு மிகவும் அநுகூலமா யிருக்கிறது. ஏழைமக்களின் பசிக் கொடுமையைத் தனவந்தர்களும் தம் முடைய சொந்த அனுபவத்தால் ஒருவாறு தெரிந்துகொள்ள இடமேற்படுகிறது.

உபவாசத்தால் ரணமும் சிறு நீர்க் காயங்களும் சுத்தமடைகின்றன. ரத்தஞ் சுத்தியாகி நரம்புகள் வலுவடைகின்றன. சரீரத்தில் உள்ள உபயோக மற்ற பொருள்கள் வெளியாகின்றன. எனவே, இந்த உபவாசமானது சரீர சௌகரியத்துக்கு முக்கிய சாதனமாகவும் இருக்கிறது.

மனிதன் தனனுடைய தீய இச்சைகளை அடக்குவதற்காகவும் கஷ்டங்களைச் சகித்துக் கொள்ளுவதற்காகவும் சகோதர உணர்ச்சியைக் கற்பதற்காகவும் இஸ்லாத்தில் ஏற்படுத்தப் பட்ட அப்பியாசமே நோன்பு. உபவாச காலத் தில் முஸ்லிம்கள் தமக்கு உரிமையான வஸ்துக் களையும் விலக்கிவைத்து விடுகிறார்கள். எனவே, அவர்களுக்குத் தடுக்கப்பட்டிருக்கும் பிறருடைய பொருள்களின்மீது அவர்கள் சிறிதும் ஆசைப் படக்கூடாதென்பது சிறந்த படிப்பாகும். ஆண் டவனுக்காக மனிதன் தன்னுடைய சொந்த விருப்பங்களையும் இச்சைகளையும் தியாகம் செய்

துவிட்டு ஆண்டவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படியவேண்டும் என்பதை இந்த உபவாசம் சுட்டிக்காட்டுகிறது, சதா கேவலம் வயிற்றுக்கான உணவுக்கு அடிமைப்பட்டிருப்பதை விட்டு விட்டு ஆன்ம முன்னேற்றத்திற்காகவும் ஹிருதய பரிசுத்தத்திற்காகவும் ஏற்பட்டுச்செய்கிறது.

இந்த ரமலான் மாதம் இதர பதினொரு மாதங்களைவிடச் சிறந்தது என்று முஸ்லிம்க ளால் கருதப்படுகிறது. முஸ்லிம்கள் இம்மாதத் தின் முதல் நாளை மிகக ஆவலுடனே எதிர்பார்க் கிறார்கள் இம்மாதத்தின் பிறையைக் கண்டதும் முஸ்லிம்களெல்லாம் குதூகலங் கொள்ளுகிறார் கள். இம் மாதம் முழுதும் முஸ்லிம்கள் தங்க ளுடைய ஆத்மாவையும் சரீரத்தையும் மனத்தை யும் பரிசுத்தப்படுத்திக் கொள்ளுகிறார்கள்; கட வுளுடைய வணக்கத்தில் அதிகமாக ஈடுபட் டிருப்பார்கள். இம் மாதமுழுதும் முஸ்லிம் உல கமே ஒருவகையான பக்தியாலும் பரிசுத்தத்தா லும் மூடப்பட்டதுபோல் காணப்படுகிறது.

---

## 21. ஜகாத்

ஜகாத் என்பது ஏழைகளின் கஷ்டத்தைப் போக்குவதற்காகப் பணக்காரர்களால் கொடுக்கப் படும் ஏழை விகிதமாகும். இஃது இஸ்லாத்தின்

ஐந்து முக்கிய அனுஷ்டானங்களில நான்காவ தாகும். 52½-ரூபாய் அல்லது 12-பவுன் பெறு மானமுள்ள ரொக்கமாவது நகையாவது உள்ள பருவமடைநத ஒவ்வொரு முஸ்லிமும வருஷத் திற்கு ஒருதடவை தன்னுடைய ஆஸ்தியில் 100 கிக்கு 2½ விதம தானம செய்யவேண்டும. இது கட்டாயக கடமையாகும்.

தான் தேடிய சொதது தனககும் தன் னுடைய குடும்பததுக்கும் மாததிரம் உரிய தென்று த ன வ ந தா க ள் நினைககமுடியாது. இவாகளுடைய வரும்படியில மற்றவாகளுக்கும் பங்கு உணடு. இதனுல, இஸ்லாமிய சகோத ரததுவமும தாராளததன்மையும் நனகு நிரூபிக் கப்படுகின்றன இதனுல ஏழைகளுககும் பணக் காராகளுக்கும ஒருவிதமான சம்பந்தம ஏற்படு கிறது. தம்முடைய இலாபததில ஒரு பங்கை ஏழைகளுக்காக ஒதுக்கி வைககாத எந்தப் பிரபு வும் இஸலாமிய சகோதரததுவக கோட்டைக் குள் இடம்பெற முடியாது. இந்த ஏற்பாட்டால உலக மக்களின் வறுமை குறைகிறது; சமூகக் குறைபாடுகள் நீங்குகின்றன. சகோதரத்துவ மும் இரக்ககுணமும் அன்பும் அதிகரிக்கின்றன. ஜகாத் என்பது இஸ்லாததின் பொதுப் பொக கிஷமா யிருக்கிறது.

இந்த ஜகாத்தை எட்டு விதமான வழிகளில் செலவு செய்ய வேண்டுமென்று இஸ்லாத்தில்

கூறப்பட்டிருக்கிறது:—1. ஏழைகள், 2. பண உதவிவேண்டுவோர், 3. கடன்பட்டோர், 4. யுத்தக் கைதிகளை விடுவித்தல், 5. வழிப்போக்கர், 6. ஜகாத் வரவு செலவு இலாகா உத்தியோகஸ்தர், 7. சத்தியத்துக்காக உழைப்பவர், 8. அல்லா(ஹ்)வின் பாதை ஆகிய இந்த எட்டு வழிகளில் ஏழை விகிதத்தைச் செலவிட வேண்டும்.

முதலாவது வகுப்பினரான ஏழைகள் என்பவர் உண்மையில் ஏதும் சம்பாதிக்கச் சக்தியற்ற அங்கஹீன முடையவர்களும் வயது முதிர்ந்தவர்களுமே யாவர். நல்ல தேகதிட முள்ளவர்களுக்கும், சோம்பேறிகளுக்கும், யாசகத்தையே ஜன்மத் தொழிலாகக் கொண்டவர்களுக்கும் ஜகாத்தில் பங்கில்லை. சுயமே சம்பாதிக்கக் கூடிய திடகாத்திரம் உள்ளவர்கள் யாசகம் வாங்குவது கூடாத காரியமென்று இஸ்லாம் அடியுடன் தடுத்திருக்கிறது.

இரண்டாவது வகுப்பினரான பணவுதவி வேண்டுவோர் என்பவர் ஏழைகளாயில்லா விட்டாலும் வேறு ஏதாவது விசேஷ காரணத்தால் கையில் பணமில்லாது சங்கடப்பட்டு நிற்கிறவர்கள்.

மூன்றாவது வகுப்பினரான கடன்பட்டோர் என்பவர் உண்மையிலேயே கடனாளியாகி விட்டவர்கள். இவர்களுடைய கடனைத் தீர்ப்பதற்காக இப்பணத்திலிருந்து சிறிது செலவு செய்யலாம்;

ஆனால் உள்ளதை மறைத்துக் கொண்டு கடன் கொடுத்தவர்களை ஏமாற்றும் எண்ண முடையவர் களுககு இதில் பாகமிலலை.

நான்காவதாக, அடிமைகளை விடுதலை செய்வ தற்கும் இதிலிருந்து உபயோகிக்கலாம் ஐந்தா வது வகுப்பினரான வழிப்போககாகள, இடம் பொருள் ஏவல என்னும வசதிகள இலலாமல அன்னிய ஊாகளில் அகப்பட்டுக கஷ்டப் படும் பொழுது, அவாகளுக்கு ஜகாத நிதியிலிருந்து ஒரு பகுதியை விநியோகிககலாம.

ஆருவது வகுபபாா, ஜகாத நிதியை வசூலி தது அதற்குரிய வழிகளில செலவிடுவதற்கென்று ஏற்படடுளள இலாகாவின் உததியோகஸ்தாகள. ஏழாவது எட்டாவது பிரிவுகள, இஸ்லாததைப் பரவச செய்வதறகும் இதன் தற்காபபுககும் இதில ஊழியஞ செயகிறவாகளுக்கும் இதற்காகப் பாடு படும ஸ்தாபனஙகளுக்கும ஜகாத பணததி லிருநது உபயோகிபபதைக் குறிபபிடுகின்றன.

இஸ்லாததின் ஆரம்ப காலததில ஏழை வரியை வசூல செய்து அதறகுரிய வழிகளில் செலவு செய்வதற்காக ஓர் இலாகா இருந்து வந் தது. அப்பொழுது இந்த நிதி மிகவும் ஒழுங் குடன் செலவு செய்யப்பட்டு வந்தது. அக்காலத் தில் முஸ்லிம்கள் எல்லாத் துறைகளிலும் அபி விருத்தி யடைந்திருந்தார்கள். ஆனால், இக் காலத்தில் ஏழைவரியானது ஒழுங்குடன் வசூல்

செய்யப்படுவதுமில்லை ; செலவு செய்யப்படுவது மில்லை. அதனால் முஸ்லிம்களுள் சோம்பேறி யாசகர்கள் அதிகமாகப் பெருகி விட்டார்கள். முஸ்லிம்களும்பல துறைகளில் வீழ்ச்சி யடைந்து வருகிறார்கள்.

---

## 22. ஹஜ்ஜு

இஃது இஸ்லாத்தின் அனுஷ்டானக கடமைகளுள் இறுதியானது. போதிய பணமும் துணையும் பலமும் சகதியும் உள்ளவாகள் தங்கள் ஆயுளில் ஒரு தடவை மககாவுககுச சென்று அங்கேயுளள கஃபாவைத் தரிசிதது வரவேணடும். கஃபா என்பது உள்ளே ஒன்றுமிலலாத நான்கு பக்கமும் சுவரையுடைய ஒரு வெறுங கூடமாகும். இதற்குள எவ்விதமான விககிரஹமோ சித்திரமோ சிலையோ உருவமோ அடையாளமோ இல்லை

ஒவ்வொரு வருஷமும் துல்ஹஜ்ஜு மாதம் பிறை 7-க்குள், தங்கள்மீது கடமையான எல்லாத் தேச முஸ்லிம்களும் கஃபாவின் முன் வந்து கூடிவிடுகின்றனா. இஸ்லாத்தில் எலலோரும் சகோதரர்கள் என்னும் தத்துவத்தை அனுஷ்டான மூலமாகக் காட்டுவதற்காகவே முஸ்லிம்கள் மககமா நகரில் ஒன்று

மனிதர்களின் பாப விமோசனத்திற்காக வென்று ஏற்பட்டதலல.

தனவந்தர் ஏழை, வலியார் எளியார், உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற வித்தியாசம் இலலாமல, ஒரே தோற்றமாய் அங்கு எலலோரும் காணப்படுகின்றனர் அப்பொழுது ஒரு பரம ஏழையும் உடுததிக கொள்ளுமபடியான தையலிலலாத இரண்டு சாதாரணப் பருததி நூலால செயயபபட்ட வெள்ளை வஸ்திரங்களை சர்வ ஜனங்களும் அணிந்து கொள்ளுகிறாகள் அல்லா(ஹ்)வின் முன் எலலோரும் தாழமை யானவர்கள்; எலலோரும் சம அநதஸது உடையவாகள் என்பதைக் காட்டுவதற்காக அஙகுக கூடியுள்ள எவரும தலையில தொப்பி அல்லது தலைப்பாகை அணிந்து கொள்ளாமல திறந்த சிரசுடனேயே காணப்படுவர். அதுகாலை ஏழை பணக்காரன் என்ற விததியாசம் அங்குச சிறிதும் காணப்படமாட்டாது.

ஆண்டவன் ஒருவனே உயாந்தவன்; மற்ற மானிடர் யாவரும், அவாகள் எந்தத தேசத்தவாகளாயிருந்தாலும் எக் குலத்தவாகளாயிருந்தாலும் எந்த அந்தஸ்தில் உள்ளவர்களா யிருந்தாலும் அனைவரும் சமமே என்னும் இஸலாததின் உயர்ந்த கொள்கையை மக்காவில் ஹஜ்ஜின் போது காணலாம். மக்காவுக்கு யாத்திரை செய்கிறவர்கள் அரசர்களா யிருந்தாலும் மஹாப் பிரபுக்களா யிருந்தாலும் தங்களுடைய ஆடம்பர

மான விலை உயர்ந்த ஆடை ஆபரணங்களை யெல் லாம கழற்றி விடவேண்டும். பிரபுக்களுடைய பெருமையும் அரசாகளுடைய அந்தஸதும் அங்கே தலைகாட்டுவ திலலை. இந்த ஹஜ்ஜு உலக முஸலிம்களை வருஷத்திற்கு ஒரு தடவை ஓர் இடததில கொண்டு வந்து சோககிறது ஹஜ்ஜு யாததிரை செலலுகிறவாகள் உலகத் தின் பல பாகஙகளிலிருநது அங்கு வந்து சேரும் பற்பல தேச முஸலிம்களின் பழக்க வழக்கங்களை யும தோற்றஙகளையும தெரிந்து கொளளுகிறார் கள்.

பிரயாண காலத்தில் பிரயாணிகளுக்கு ஏற் படும் சகல கஷ்ட நஷ்டங்களையும் ஆண்டவனுக் காகச் சகிததுக கொள்ளும் பொருமைக் குணமும் ஏற்படுகிறது. இதனுல அவர்கள் அடையும் உலக அனுபவஙகள குறிபபிடத் தக்கன. இதற் கென்று உறறார் உறவினர்களையும் பெண்டு பிள்ளை களையும் வீடுவாசல்களையும் ஆஸ்திகளையும் விட்டு விட்டு இறைவனுடைய பாதையில திரும்பி விடத் தயாராக இருககிறார்கள் என்னும் தியாக உணாச்சியையும் இது காட்டுகிறது இறைவ னுககாக உடல, பொருள, ஆவி மூன்றும் இதில் அர்ப்பணம் செய்யபபடுகினறன. மக்காவுக்குச் செலலுகிறவர்கள் இஸலாம ஆதியில் பிறந்த இடததைக் கண்ணாரக் கண்டு களிப்படைகிறார் கள்.

---

# 23. திரு நபி தினம்

இஸ்லாத்தின் திருநபி முஹம்மது முஸ்தபா ரஸூலல(ஸல) அவர்கள் இவ்வுலகத்தில அவதரிதத தினததிறகே "திருநபி தினம' என்றும் "மீலாதெ ஷரீப்" என்றும் சொலலப்படும். இத் தினம் ஒவ்வொரு வருடமும் ரபீஉல் அவ்வல் மாதம 12-ந் தேதியன்று முஸலிம்களாலும் முஸலிமலலாதவர்களாலும் விசேஷமாகக் கொணடாடப்படுகிறது. இது வெறும வேடிக் கைககாகவும் வீண் தமாஷாவுக்காகவும் கொண் டாடப்படும் திருநாள் அலல. நபிகள் பெருமானா அவாகளின் சரிததிரக குறிப்பும் அவாகள் இவ்வுலக ஜனங்களின் முன்னேற்றததிற்காக அருளிய அமுத மொழிகளும் அன்று எலலோருக்கும் எடுத்துக் கூறபபடுகின்றன. நபிகள் திலகம் அவர்களின வாழ்க்கையைப் பற்றிய விசேஷங்களும் அவாகளின் ஒப்பற்ற குணாதிசயங்களும் சுருக்கமாகப் பல பாஷைகளிலும பிரசுரம் செய்யப்பட்டு ஜாதி மத பேதம் இல்லாமல் எலலோருக்கும் இலவசமாக விநியோகிக்கப்படுகின்றன. அன்றைத் தினத்தில ஜாதிமத வித்தியாசம் இலலாத பெருங் கூட்டங்கள் கூட்டப்படுகின்றன. அக்கூட்டங்களில் மக்களுக்குச் சமத்துவமும் சகோதரத்துவமும் ஒற்றுமையும் போதிக்கப்படுகின்றன. உலக முழுதுமுள்ள நகரங்களி

லும் பட்டணங்களிலும் கிராமங்களிலும் இத் தினம் மிகவும் நல்ல முறையில் கொண்டாடப் பட்டு வருகிறது. நாயகம் அவர்களின் மேலான நடத்தைகள் எல்லோருக்கும் பொது மேடைகளில் எடுததுரைக்கப்படுகின்றன. இவற்ருல முஸலிம்கள் மட்டுமல்லாது நாயகம் அவர்களின பெருமையை அறியாத அயல் மத சகோதரா களும் அவாகளைப்பற்றி அதிகம தெரிந்து கொள்ளுகிருாகள்.

அன்றைத தினததில முஸ்லிம்கள் வசிக்கும ஒவ்வொரு குக்கிராமத்திலும் பெரிய நகரததிலும் பெரிய பெரிய பொதுக்கூட்டஙகள் கூட்டபடுகின்றன அக்கூட்டங்களில் நாயகம் அவர்களின் சற்குணங்களும் அவர்களால் உலகததுக்கு ஏற்பட்ட நன்மைகளும் எடுத்துக் கூறப்படுகின்றன. இதனுல இஸ்லாத்தைப் பற்றியும் முஹம்மது நபியவர்களைப் பற்றியும் தவருன அபிப்பிராயம் கொண்டுள்ளவர்கள் உண்மையை அறிந்து தம்முடைய தப்பான அபிப்பிராயங்களை நீககிக் கொள்ளுகிருர்கள். அன்றியும் இத்தினத்தால் உலக முஸ்லிம்களின் ஒற்றுமை ஏற்படுகிறது. இஃது ஓர் உலக ஐக்கிய நாளாகவே காணப்படுகிறது.

நபிகள் நாயகம் அவர்கள் ஜனங்களுக்கு என்னென்ன உபதேசித்தார்களோ, எவ்விதம் அவர்கள் நடந்து கொணடார்களோ, எவ்விதம்

நடந்து கொள்ள வேண்டுமென்று அவர்கள் கட்டளையிட்டார்களோ அவ்விதமே முஸ்லிம்கள் செயலில நடந்துகொள்ள வேணடும். இவ்விதம் செய்கையில் அப்பெருமானர் அவர்களைப் பின்பற்றுவது தான் அவாகளின பிறநத தினத்தைத் தச்க விதமாகக் கொண்டாடியதாகும்.

---

## 24. லைலத்துல் கத்ர்

ரமலான் மாதம் 27-வது இரவுகசு "லைலத்துல கத்ா" என்று பெயா இதற்கு மாட்சிமை மிக்க இரவு என்று பொருள். அன்றிரவில் தான் ஆண்டவனுடைய இறுதி வேதமாகிய குர்ஆன் ஷரீப் இவ்வுலகததுக்கு முதன் முதலில் அனுப்பப்பட்டது. அன்றுதான் இஸலாததின் ஞான ஜோதியானது முஹம்மது நபி (ஸல்) அவாகள் மூலமாக இவ்வுலகத்து ஜனங்களுககு இறக்கப்பட்டது. அன்றிரவிற்குப் பல தினங்களுக்கு முதலில் இருந்தே முஹம்மது நபி (ஸல) அவர்கள் ஹிரா என்னும் மலைககுகையில நோன்பு நோற்றுக் கடுமையான தவம் செய்து வந்தார்கள். ஆண்டவன் முதன் முதலாக அன்றிரவில தான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் வானவர் ஜிப்ரீல் (அலை) அவர்கள் மூலமாகச் சம்பாஷிக்கத் தொடங்கினன். அன்றிரவில் தான் முதல் ஞான

வெளிப்பாடானது நாயகம் அவர்களுக்கு அருளப்பட்டது. இம்மாதிரியான பல காரணங்களைக் கொண்டே ஆண்டவன் இந்த இரவு ஆயிரம் மாதங்களைவிட மேலானதென்று தன்னுடைய திருக்குர்ஆனில் கூறியிருக்கிறான். இந்த இரவில் வணக்கம் செய்து இறைவனுடைய கருணையைப் பெற்றுக் கொள்ளவேண்டியது முஸ்லிம்களுடைய கடமையாகும்.

இந்த உலகமே அஞ்ஞானத்திலும் அந்தகாரத்திலும் ஆழ்ந்து கிடந்த அக்காலத்தில் உலக முழுதும் உள்ள எல்லா ஜாதியார்களுக்கும் எல்லாத் தேசத்தார்களுக்கும் எல்லாக் காலத்தவர்களுக்கும் பொருத்தமான இறுதி வேதமாகிய குர்ஆன் ஷரீப் இந்த லைலத்துல் கத்ர் என்னும் இரவில் தான் நபிகள் திலகம் அவர்கள் மூலமாக இவ்வுலகத்துக்கு அருளப்பட்டது.

---

## 25. நோன்புப் பெருநாள்

இதற்கு "முப்பது நோன்புப் பெருநாள்" என்றும் "ஈதுல் பித்ர்" என்றும் சொல்லப்படும். ரமலான் மாத நோன்பு முழுதும் முடிந்த மறுநாள், அஃதாவது ஷவ்வால் மாதம் முதல்தேதியன்று இப்பெருநாள் கொண்டாடப்படும். இஃது எவருடைய பிறந்த தினத்தையோ

இறந்த தினத்தையோ கொண்டாடுவதற்காக ஏற்பட்டதல்ல. ஆண்டவனுடைய கட்டளைக்கு உட்பட்டுப் புலன்களை அடக்கி ரமலான் மாத முழுதும் நோன்பு நோற்று வெற்றி பெற்றதற்கு அறிகுறியாகவே இப்பெருநாள் கொண்டாடப்படுகிறது. தாங்கள் பெற்ற வெற்றிக்கு அடையாளமாகவே முஸ்லிம்கள் அத்தினத்தில் புதிய உடைகள் அணிந்துகொண்டு உல்லாசத்துடன் நல்ல விதமான உணவுகள் தயாரித்துக் களிப்புடன் உண்டு மகிழுகின்றனர். அன்று முற்பகலில் ஆண்டவனை வணங்குவதற்காகவும் அவனுக்கு நன்றி செலுத்துவதற்காகவும் எல்லா முஸ்லிம்களும் பள்ளிவாசல்களில் கூடுகிறார்கள். சில ஊர்களிலும் பெரிய நகரங்களிலும் பெருநாள் தொழுகைக்காகவென்றே "ஈதகா" என்னும் சோலைகளும் திறந்த மைதானங்களும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். பெரும்பாலும் நகரங்களில் உள்ளவர்கள் அத்தினத்தில் ஒரே இடத்தில் சேர்ந்து தொழுதுகொள்ளுகிறார்கள். தொழுகை முடிந்தபிறகு அனைவரும் ஒருவரையொருவர் கட்டித் தழுவுகின்றனர்; முகமன் கூறுகின்றனர். இதனால் ஒருவருக்கு மற்றொருவரிடமுள்ள பகைமையும் விரோதமும் நீங்குகின்றன. ஒற்றுமை அதிகரிக்கிறது. அன்றுமுழுதும் எங்கும் சந்தோஷமும் குதூகலமும் ஆரவாரமுமே காணப்படும்.

இந்தப் பெருநாள் உண்மையாகவே கடவுளுக்குப் பயந்து நோன்பு நோற்றவர்களுக்குத்தான் ஏற்பட்டிருக்கிறது. நோன்பு வைத்தவர்களும் வைக்காதவர்களும் ஆகிய எல்லோருமே இப்பெருநாளைக் கொண்டாடுகிறார்கள். ஆனால், நோன்பு வைத்தவர்களுக்குத்தான் இது பெருநாளாகும். மற்றவர்களுக்கெல்லாம் வெறுநாளேயாகும். போட்டிப பந்தயங்களிலும் பரீக்ஷைகளிலும் வெற்றிபெற்றவர்கள் சந்தோஷங் கொண்டாடுவதுபோல் 30-நாள் விரதப பரீக்ஷையில் வெற்றி பெற்றவர்களுக்கு இது வெற்றிக் கொண்டாட்டமாகும்.

---

## 26. ஹஜ்ஜுப் பெருநாள்

இது முஸ்லிம்கள் கொண்டாடும் மற்றொரு பெருநாளாகும். இதனை "ஈதுல் அலஹா" என்றும் "பக்ரீத்" என்றும் சொல்லுவதுண்டு. இப்பெருநாள் ஒவ்வொரு வருஷமும் துலஹஜ்ஜு மாதம் 10-ஆம் நாள் கொண்டாடப்படுகிறது. நோன்புப் பெருநாளைப்போலவே இந்தப் பெருநாளிலும் முஸலிம்கள் புதிய ஆடைகள் உடுத்தி நல்ல ருசியான உணவுகள் உண்டு ஆண்டவனை வணங்குகிறார்கள். அன்றியும் "குர்பானீ" என்னும் ஒரு விசேஷ வேள்வியும் அன்று நடைபெறுகிறது.

இஸ்லாத்தின் பண்டிகைகள் வெறும் தமாஷாக்கள் அல்ல. இந்த உலகத்திலுள்ள மனிதர்களுக்குள் சமத்துவத்தையும் சமாதானத்தையும் சகோதரத்துவத்தையும் உண்டு பண்ண வேண்டும் என்பதே இஸலாத்தின் நோக்கமாகும். எனவே, இஸ்லாததின் ஒவ்வொரு அனுஷ்டானமும் இந்த முககிய நோக்கததையே அடிப்படையாகக கொண்டிருககிறது.

மனிதன் செய்ய வேண்டிய ஒரு பெரிய தியாகததைச் சுட்டிக காட்டுவதறகாகவே ஹஜ்ஜுப் பெருநாள் ஏற்படுததப் பட்டிருக்கிறது. உலகத்தில் தோன்றி மறைந்த முக்கியமான தீர்க்கதரிசிகளுள் நபி இப்ராஹீம் (அலை) அவாகளும ஒருவராவாாகள். அவாகள் தங்களுக்குள்ள ஆஸ்தி பூஸ்தி எல்லாவற்றையும் ஆண்டவன் பாதையில தியாகம் செய்து விட்டாாகள். இன்னும் அவாகளை தங்களின் உயிரினும் பிரியமான எதையும ஆண்டவன் பாதையில தியாகம் செய்துவிடத் தயாராயிருந்தார்கள். தங்களின் பிற்காலததில் ஊன்று கோலைப்போல் உதவக்கூடிய ஒரே புததிரரைத்தான் மிகுதியாகப் பெற்றிருந்தாாகள அவர்களுடைய அளவற்ற தெய்வ பகதியையும் விசுவாசததையும் உலக ஜனங்களுக்குக் காட்ட வேண்டுமென்று ஆண்டவன் எண்ணினன். அவ்வாறே அவர்களுடைய ஈரல் கொழுந்தைப் போலிருந்த ஏக புத்திரரான நபி இஸ்மாயீல் (அலை) அவர்களை ஆண்டவன்

பாறையில் பலி கொடுக்க வேண்டுமென்று கட்டளை பிறந்தது. எனவே, அக கட்டளைக்கிணங்க, அவ்வொரே புதல்வரையும் ஆண்டவனுக்காகத் தியாகம்செய்துவிட நபி இப்ராஹீம்(அலை) அவர்கள துணிந்து விட்டார்கள் அச் சிறு புத்திரரும் தமது அரிய உயிரை அல்லா(ஹ்)வுக்காகத தியாகம் செய்துவிட முழுமனதுடன் முன்வந்து விட்டார்.

ஆண்டவனுக்கு நபி இப்ராஹீம் (அலை) அவர்களின் பக்தியின்மீதும் தியாக உணர்ச்சியின் மீதும் சந்தேகம் ஏற்பட்டு விடவில்லை. நபி இப்ராஹீம் (அலை) நபி இஸ்மாயீல (அலை) ஆகிய இருவரின் தியாகத்தையும் பக்தி விசுவாசததையும் உலக மனிதர்களுக்குக் காட்டுவதற்காகவும் அவ்விருவரையும் மற்றவர்கள் உதாரணமாகப் பின்பற்றுவதற்காகவுமே ஆண்டவன் இக்கட்டளையைச் செய்தான். ஆனால் நபி இஸ்மாயீல (அலை) அவர்களின் இரத்தத்திலாவது மாம்ஸததிலாவது ஆண்டவனுக்குச் சிறிதும் விருப்பமில்லை.

மினு என்னும் பாறையில் நபி இஸ்மாயீல் (அலை) அவர்கள் குப்புறக் கிடக்கையில நபி இப்ராஹீம் (அலை) அவர்கள் தங்களுடைய கண்களை வஸ்திரத்தால் இறுகக் கட்டிக்கொண்டு கையில் கத்தியை ஏந்திப் புதல்வரின் கழுத்தில கத்தியைப் பொருத்தினார்கள். இவ்விதம் தந்தையும் புதல்வரும் பெரிய தியாகத்துக்குத துணிந்து

விட்டார்கள். உலகமும் இவர்களின் தியாக உணர்ச்சியைத் தெரிந்து கொண்டுவிட்டது எனவே அவ்விளைஞரின் உயிரை வாங்க ஆண்டவன் விரும்பவில்லை. ஆகவே, நபி இஸ்மாயீல் (அலை) அவர்களின் தலை அறுபடுவதற்குப் பதிலாக அங்கே ஒரு செம்மறியாட்டின் தலை அறுபட்டது. சுமார் 6000 வருஷங்களுக்கு முன் செய்யப்பட்ட இந்த ஒப்பற்ற தியாகத்தை ஞாபக மூட்டிக்கொண்டு அம்மாதிரியான தியாக புத்தியுடன் வாழ்ந்து வரவேண்டு மென்பதற்காகவே இப்பொழுதும் ஹஜ்ஜுப் பெருநாளன்று ஆட்டுக்கிடாக்கள் பலிகொடுக்கப் படுகின்றன ஆனால் இந்தப் பலியானது மனிதர்களின் பிராயச் சித்தத்திற்காக ஏற்பட்டதல்ல. பிராயச்சித்தம் என்பதற்கு இஸ்லாத்தில் சிறிதும் இடங்கிடையாது.

இப் பெருநாளானது நபி இப்ராஹீம் (அலை) அவர்களும் நபி இஸ்மாயீல் (அலை) அவர்களும் செய்து காட்டிச் சென்ற பெரிய சுயநலத் தியாகங்களை முஸ்லிம்கள் ஞாபகப்படுத்திக் கொண்டு அம்மாதிரியான தியாகபுத்தி யுள்ளவர்களா யிருக்க வேண்டும் என்பதைப் போதிப்பதற்காகவே ஏற்பட்டிருக்கிறது.

# 27. முஹர்ரம்

முஸ்லிம்களின் வருடத்திற்கு ஹிஜ்ரி என்று பெயா. முஹம்மது நபி (ஸல்) அவர்கள் மக்கா வாசிகளின கொடுமையைச் சகிக்க முடியாமல கி பி 622-ல் மதீனுவுக்குப் புறப்பட்டாாகள். இவ்வருடம் இஸ்லாமிய சரித்திரத்தில் விசேஷ மாகக கருதப்படுகிறது. இவ்வருடமுதல்தான் முஸ்லிம்களின் ஹிஜ்ரி ஆரம்பமாகிறது

ஹிஜ்ரி வருடததின முதலமாதம் முஹாரம் என்பதாகும. மறற தமிழ ஆஙகில வருஷங்கள் பிரிக்கப்பட்டிருப்பன போலவே ஹிஜ்ரி வருட மும் 12 மாதங்களாகப் பிரிககப்படடிருககிறது. இம்மாதஙகள சந்திர ஓட்டக் கணககுபபடி கணிக்கப்படுகின்றன. சில மாதங்களில 30 தினங் களும் சில மாதங்களில் 29 தினங்களும் வரும். இபபன்னிரண்டு மாதங்களும முறையே பின் வருமாறு :— 1. முஹர்ரம, 2 ஸபா, 3. ரபீஉல அவ்வல், 4. ரபீஉல்ஆகிர், 5. ஜமாதுல்அவ்வல், 6 ஜமாதுல் ஆகிர், 7. ரஜப், 8. ஷஃபான், 9. ரமலான், 10. ஷவ்வால், 11. துல் கஃதா, 12. துல் ஹஜ்.

ஹிஜ்ரி 61-ல் முஹர்ரம் மாதத்தின் ஆரம்பத் தில் இஸ்லாமியக் குடியரசுக கொள்கையை நிலை நாட்டுவதற்காக இமாம் ஹுஸைன்(ரலி) அவர்

கள் அரேபியா தேசத்தில் கர்பலா என்னும் இடத்தில் எஜீதின் சேனைகளுடன் போர்செய்து உயிர் துறந்தார்கள்.

இம்மாததகின் முதல 10 தினங்களிலும் சாதாரணமாக இந்தியாவில நடைபெற்றுவரும் வேடிக்கை விநோதஙகளுக்கும், புலி வேஷங்களுக்கும், கரிவேஷங்களுக்கும், பஞ்சா வைபவங்களுக்கும் இஸலாததில கொஞ்சமும் அனுமதியிலலை இவைகளுக்கு இஸலாமிய நூலகளில சிறிதும் ஆதாரமில்லை. இவை யெலலாம் ஆத்த மற்ற பழகக வழககங்களே. அன்றியும், இந்த அனுசாரச செய்கைகள் இஸ்லாததின் மூலக் கொள்கைகளுககு முற்றும்விரோதமானவை. இக காரியஙகள உண்மை முஸ்லிம்களின் மனததைப் புணபடுததுகின்றன. இந்தப் பஞ்சாக்களும் புலி வேஷஙகளும கரிக்கோலங்களும் ஊாகோலங்களும இஸலாம் என்று எவரும் நினைததுவிடா தீாகள. இவ்விதம் நினைப்பது முழுதும் தவறு கும். இநத வேடிக்கைகளுககும் இஸ்லாத்துக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. அறியாத முஸலிம்களும் முஸலிமலலாதவர்களுமே இவைகளைக் கொண்டாடி வருகிறார்கள். பஞ்சா வைப்பதும், ஊர்வலம் செய்வதும், குதிப்பதும், கூததாடுவதும், நெருப்பில் இறங்குவதும் மாரடித்துக் கொள்ளுவதும் ஒப்பாரி வைப்பதும் இஸ்லாத்தைப் பரிகாசம் செய்வதாகும்.

இஸ்லாததின் குடியரசுக் கொள்கைக்கு முற்றும் மாறுக நடந்துகொண்ட எஜீதின் அநியாய அக்கிரமததை வெளி உலகததினருக்கு விளக்கிக் காட்டுவதறகாகவே இமாம் ஹுஸைன் (ரலி) அவாகள் தங்களின் உயிரைத தியாகம செய் தார்கள். இந்தத் தியாகததின் உணமையையும் உயர்வையும அறிநது அவ்விதம் தியாக புததி யுடையவர்களாயிருக்க முயற்சி செய்யவேண்டி யதே முஹாரம் மாததில் முஸலிம்கள் கறறுக் கொள்ளவேண்டிய சிறந்த படிப்பினையாகும்.

---

## 28. கஃபா

அரப் தேசத்தின் மததியில உளள மக்கா நகரததில கஃபா என்னும் ஒரு தேவாலயம் இருககிறது. ஏக தெய்வ வணக்கத்துககாக இவ் வுலகததில முதன் முதலில கட்டப்பட்ட தேவா லயம் இதுதான். சுமார் 6 ஆயிரம் வருஷங் களுக்கு முன் அரேபியாவில குடியேறிய நபி இபராஹீம் (அலை) நபி இஸமாயீல (அலை) ஆகிய வாகளுக்கு நெடுஙகாலததுககு முன்னேயே இந் தக கஃபாவானது மக்காவில் இப்பொழுதுள்ள இடத்திலேயே இருந்து வந்ததாம். இவர் களால் இந்த ஆலயம் பழுது பார்க்கப்பட்டது. இதைவிடப் [illegible]னமான வேறொரு தேவா லயம் இந்த உலக்த்தின் எந்தப் பாகத்திலும் இலலை. "மனிதாகளுக்காகக் கட்டப்பட்ட முதல்